நாவாந்துறைப் பொது நூலகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 30 திங்கட்கிழமை (12.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 145




## ஐ.ம.சு.மு. - 20, ஐ.தே.க. - 15, ஜே.வி.பி. - 01, த.ஐ.தே.மு. -01

# கிழக்கு மாகாண சபை ஆட்சி

# ஐ.ம. சு. முன்னணியின் வசம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையினை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றியுள்ளது. பெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியிருந்த கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 15, ஜே.வி.பி. 01, தமிழ் ஜனநாயகத் தேசிய முன்னணி 01 என்ற அடிப்படையில் 17 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன. (02 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பயங்கரவாதத்திற்கு தேர்தல் வித்திட்டுள்ளது

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனநாயகத்தை எதிர்பார்த்த கிழக்கு மாகாண மக்களுக்கு அந்த எதிர்பார்ப்பு, கைநழுவிப் போய் மீண்டும் புதியதொரு பயங்கரவாதத்திற்குத் தேர்தல் வித்திட்டுள்ளது.

மிக விரைவில் அரச பயங்கரவாதத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே விஜித்த ஹேரத் எம்.பி. (10 ஆம் பக்கம் பார்க்க)

## பொருளியல் ஆசிரியரை காணவில்லை என முறையீடு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல பொருளியல் ஆசிரியரான வரதராஜனும் அவரது மைத்துனர் ஸ்ரீதரனும் நேற்று கொழும்பில் காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

வெள்ளவத்தையில் உள்ள கொழும்பு தமிழ் சங்கத்தில்' வகுப்பு எடுத்து விட்டு புறக்கோட்டையிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்றபோது நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வரதராஜன் காணாமல் போயுள்ளார்.

இது குறித்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் அனுசரணைப் பணி குறித்து விடுதலைப்புலிகள் தீர்மானிக்கவில்லை

### புலித்தேவன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியாவின் அனுசரணையை ஏற்றுக் கொள்வதா? இல்லையா? என்பது பற்றி தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் இராணுவத் தீர்வையே விரும்புவதாகவும் இதனாலேயே தமது அரசியல்துறையுடன் சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேயைச் சந்திக்க அனுமதி அளிக்க மறுத்துள்ளதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் தாம் தொடர்ந்து நோர்வே அரசுடன் தொடர்புகளைப் பேணி வருவதாகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான சண்டே (10 ஆம் பக்கம் பார்க்க)

## பேரிடியாக கொடுக்கப்பட்ட தாக்குதலே கப்பல் தகர்ப்பு

### இளந்திரையன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

திருகோணமலையில் எதிரிக்குப் பேரிடியாகக் கொடுக்கப்பட்ட அடியாகத்தான் கப்பல் தகர்ப்பு அமைந்துள்ளது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற வீரமுரசு நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்

### பதவியேற்றதன் பின்னர் ஆளுநர் நியமனம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைக்கு முதலமைச்சர் நியமிக்கப்பட்டதன் பின்னர் கிழக்கு மாகாண சபையும் ஏனைய மாகாண சபைகளைப் போல இயங்கும். கிழக்கு மாகாண சபை முதலமைச்சரைத் தெரிவு செய்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இவ்வாரத்திற்குள் முதலமைச்சர் நியமிக்கப்படுவார் என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண (02 ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையானுக்கு கூடிய விருப்பு வாக்குகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிள்ளையான் (சிவநேசதுரை சந்திரகாந்தன்) அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

அதாவது 41 ஆயிரத்து 936 வாக்குகளைப் பெற்று இவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பட்டியலில் இர்ண்டாம் இடத்தை ஜே.எஸ்.மொகமெட் பெற்றுள்ளார்.

இவர் 36 (10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் வசம் ஐந்து சிலின் ரக விமானங்கள்

### சண்டே லீடர் நாளோடு தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் வசம் ஐந்துக்கும் அதிகமான சிலின்-143 ரக விமானங்கள் உள்ளதாகப் படையினரின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான சண்டே லீடர் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, விடுதலைப்புலிகள் முல்லைத்தீவிலுள்ள தமது விமான ஓடு பாதையை புனரமைத்து வருகின்றனர். அண்மையில் மணலாற்றுப் பகுதியில் அவர்கள் மேற்கொண்ட வான் தாக்குதல் அதனையே தெரிவித்துள்ளது.

இரணைமடுவுக்கு அருகிலுள்ள விமான ஓடு பாதையைத் தவிர அவர்கள் மேலும் 3 ஓடு பாதைகளை அமைத்துள்ளனர். 2005 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் மூலம் இரணைமடுவுக்குத் தென்கிழக்காகவும் புதுக்குடியிருப்புப் பகுதியிலும் இரு விமான ஓடு (10 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை சபையில் இடம்பிடிக்க இலங்கை அரசு இறுதிக்கட்ட முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையில் மீண்டும் தெரிவாவதற்கான இறுதி முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் நாளை தீவிரமாக இறங்கவுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

எதிர்வரும் 21ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபைக்கான தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் 47 அங்கத்தவர்களில் இடம்பிடிப்பதற்கு இலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக மனித உரிமை அமைச்சர் மகிந்த சமரசிங்க இன்று ஜெனீவாவுக்கு பயணமாகவுள்ளார்.

நாளை அங்கு நடைபெறவுள்ள மனித உரிமை சபை கூட்டத்தில் இலங்கை சார்பில் மகிந்த சமரசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் நாளை நடைபெறவுள்ள கூட்டம் காத்திரமான பங்கை வகிக்கும் என்று நம்புவதாக மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்..

இலங்கை தொடர்பில் நாம் எமது அறிக்கையை சமர்ப்பிப்போம். அந்த அறிக்கையில் இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு நாம் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பான தகவல்கள் உள்ளன.

இந்தக் கூட்டத்தில் எமக்கு நல்ல பலன் கிடைக்கும் என நாம் நம்புகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

47 அங்கத்தவர்களைக் கொண்ட இந்த சபைக்கு இலங்கை 2006ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டிருந்தது.

தற்போது அது மீண்டும் வாக்கெடுப்பைச் சந்தித்துள்ளது. இந்த சபையிலுள்ள நான்கு வெற்றிடங்களில் ஒன்றிற்கு இலங்கை அரசு, பாகிஸ்தான், பஹ்ரைன், திமோர்-லெஸ்ரி, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் போட்டியிடுகின்றன. (ச-5)

## முன்னாள் பணிப்பாளர் நவமலர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளரும் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியுமான கலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம் (வயது 69) நேற்றுக் காலமானார்.

மருதனார்மடத்திலுள்ள கே.என்.புற்று நோய்க் காப்பகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இவர் உள்ளார்.

சிறந்த சமூகசேவையாளரான இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இதழியல் பட்டக் கற்கை நெறிகளை யாழ்.பல்கலையில் ஆரம்பிக்க நடவடிக்கை

## எம்.ஆர்.ரி.சியின் பணிப்பாளர் பேரா. பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதழியல் சார் பட்டக் கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிமையத்தின் (எம்.ஆர்.ரி.சி) பணிப்பாளரும் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

பயிற்சி மையத்தில் நேற்று நடைபெற்ற இதழியல் டிப்ளோமா பகுதிநேர மாணவர்களின் பயிற்சி இதழான 'எழுத்தாணி' பத்திரிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

ஊடக உலகில் மிகப்பெரிய தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. உலகில் உள்ள மாணவர்களின் கல்வித் தெரிவிலும் ஊடகக் கல்வியே முதன்மைத் தெரிவாக மாறிவருகின்றது. அந்நிலை இங்கும் ஏற்படவேண்டும்.

உலகில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் பத்திரிகைகள் அரசாங்கத்தினையே மாற்றக் கூடிய அளவிற்கு பிரசித்தி பெற்றுள்ளன.

பல்கலைக்கழக ஊடக டிப்ளோமா மாணவர்கள் முழுமையான தொழில்சார் தகைமைகளை வெளிக் கொண்டுவரவேண்டும்.

அர்ப்பணிப்புடன் செயற்படும் மாணவர்களினாலேயே சிறந்த வெற்றியைப் பெறமுடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரைவில் இதழியல் பட்டக் கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அச்சந்தர்ப்பங்களில் மேலதிக ஊடக கல்வியை அனைவரும் பெற்று கல்வியில் மேம்பாடு அடைவதுடன் வாழ்வில் நல்லதொரு இலக்கினையும் அடைய முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஊடக டிப்ளோமா பகுதிநேர மாணவன் எஸ்.நவரத்தினராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பயிற்சி இணைப்பாளர் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை, போதனாசிரியர்களான ந.விஜயசுந்தரம், எம்.ஜனகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-246)

## கோஷ்டி மோதலில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் நேற்று மதியம் மோதல் இடம்பெற்றது.

இம்மோதலில் இருவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி மோதலையடுத்து நேற்று மதியம் நகரப்பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது. (எ-5)

# வன்முறைகளுடன் கூடிய தேர்தல் முடிபுகளை நிராகரிக்கின்றோம்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

பாரிய தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடன் நடைபெற்று முடிந்திருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிபுகளை நிராகரிப்பதென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 90 வீதமான வாக்குச் சாவடிகளில் தேர்தல் மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்த தேர்தலில் பெரும்பாலான இடங்களில் கள்ள வாக்குப் பதிவுகள் இடம்பெற்றுள்ளதுடன் வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டு வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன.

வாக்காளர்கள் எவரும் அரசாங்கத்துக்கு வாக்களிக்கவில்லை. அரசாங்கம் மக்களின் வாக்குகளை பறித்துக் கொண்டுள்ளது என அவர் குற்றஞ்சாட்டினார்.

திருக்கோவில் பகுதியில் உள்ள 17 வாக்களிப்பு நிலையங்களிலும் கள்ள வாக்குப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் அனைத்தும் வன்முறைகள் இடம்பெற்றிருப்பதை உறுதிப்படுத்தியுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறினார். (ச-5)

## தென்னையிலிருந்து வீழ்ந்து காயம்

(யாழ்ப்பாணம்)

தென்னையில் ஏறி தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் குப்பிளான் தெற்கைச் சேர்ந்த விசுவர் மகாலிங்கம் (வயது- 44) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு விபத்துக்குள்ளானவர் ஆவார்.

இவர் தேங்காய் பறிப்பதற்காக ஏறிய போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச)

## கிழக்கு மாகாண சபை முதல...

முதலமைச்சர் பதவி ஏற்றதன் பின்னரே மாகாணத்திற்கான ஆளுநர் நியமிக்கப்படுவார். பெரும்பாலும் இம் மாதத்திற்குள் கிழக்கு மாகாண சபைக்கான கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைக்கான முதலமைச்சர் நியமனம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக ஏ.எல்.எம்.ஏ. ஹிஸ்புல்லா , பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரின் பெயர்களும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ரவூவ் ஹக்கீமின் பெயரும் மக்கள் விடுதலை முன்னணி சார்பில் தயாபத்திரனவின் பெயர்களும் சிபார்சு செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றமையினால் கிழக்கு மாகாண முதலமைச்சராக முன்னணியிலிருந்தே ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைப்போல அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவரே முதலமைச்சராக நியமிக்கப்படுவார். அந்த நியமனம் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படுவதுடன் அவர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சத்தியப் பிரமாண வைபவம் பிரமாண்டமான முறையில் கொழும்பில் இடம்பெறவிருப்பதனால் அதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

கிழக்கு மாகாண சபைக்காக கடந்த வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையினால் நிதி ஒதுக்கீடு செய்வதில் பிரச்சினைகள் இல்லை என்றார். (ச-5)

## கிழக்கு மாகாண சபை ஆட்சி...

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 18 உறுப்பினர்களைப் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு போனஸ் ஆசனங்கள் இரண்டு கிடைத்துள்ளன.

இதனையடுத்து 20 உறுப்பினர்களை அக் கட்சி தனதாக்கிக் கொண்டது. தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஐந்து ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே அதிக வாக்குகள் கிடைத்துள்ளன. கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி களம் இறங்கியிருந்தது. நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இத் தேர்தலின் முடிபுகள் அன்று நள்ளிரவு முதல் வெளியிடப்பட்டன.

நேற்று நண்பகல் அளவிலேயே சகல முடிபுகளும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவால் வெளியிடப்பட்டன. இதன்படி கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 3 இலட்சத்து 8 ஆயிரத்து 886 வாக்குகளைப் பெற்று 20 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணி 2 இலட்சத்து 50 ஆயிரத்து 732 வாக்குகளைப் பெற்று 15 ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி 9 ஆயிரத்து 390 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் தமிழ் ஜனநாயக தேசிய முன்னணி 7 ஆயிரத்து 714 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 341 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 58 ஆயிரத்து 602 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களையும் தமிழ் ஜனநாயக தேசிய முன்னணி 7 ஆயிரத்து 714 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி 70 ஆயிரத்து 858 வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 59 ஆயிரத்து 298 வாக்குகளைப் பெற்று 4ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி 4 ஆயிரத்து 166 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 247 வாக்குகளைப் பெற்று 8 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 272 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

(தொகுதி வாரியான வாக்கெடுப்பு முடிபுகள் 5 ஆம் பக்கத்தில்...) (ச-5)

# பிலிப்பு நேரியார் தேவாலயத்தை புனரமைக்குமாறு வேண்டுகோள்

(அல்லைப்பிட்டி)

யுத்த அனர்த்தங்களினால் அழிவிற்குள் ளாகியிருக்கும் அல்லைப் பிட்டி பிலிப்பு நேரி யார் தேவாலயத்தினை மீள நிர்மாணித்து உதவு மாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அல்லைப்பிட்டிப் பகுதியில் மக்கள் தற்போது மீளக் குடியமர்ந்து வருகின்ற நிலையிலே இவ் வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது. நூற்றாண்டு கால பழைமை வாய்ந்த இத் தேவால யம் எறிகணை வீச்சினால் மிக மோசமாக அழிவடைந்துள்ளது. தேவாலயத்தில் வைக் கப்பட்டிருந்த திருச்சொரூபத்திற்கு என்ன நடந்தது என்பதும் தெரியாமல் உள்ளது.

2006 ஆம் ஆண்டின் மே மாத காலப் பகுதியில் ஒரே இரவில் அல்லைப்பிட்டி பகுதி களைச் சேர்ந்த 13 பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டதையடுத்து வீடுகளில் இருந்து வெளியேறிய அப் பகுதி மக்கள் இத் தேவால யத்திலேயே அடைக்கலம் புகுந்திருந்தனர்.

அதன் பின்னர் அதே ஆண்டின் ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற மோதல்களின் போதும் மீண்டும் இடம் பெயர்ந்த மக்கள் இத் தேவாலயத்திலேயே சரணாகதி அடைந்திருந்தனர்.

அப்பகுதியில் விழுந்தபீரங்கி எறிகணைகளால் அங்கிருந்த பொது மக்கள் பலரும் உயிரிழந்திருந்தனர். நூற்றுக்கணக்கானோர் காய மடைந்த நிலையில் மீட்கப்பட்டு யாழ். நகரப் பகுதிக்கு அழைத்து வரப் பட்டுமிருந் தனர். அத் தாக்குதலில் அழிவுக்குள்ளான புனித பிலிப்பு நேரியார் தேவாலயத்தை மீள நிர்மாணித்து வழங்குமாறு மீள்குடியமர்ந்த மக்களும், கத்தோலிக்க அமைப்புக்களும் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இத் தேவாலயத்தின் பங்குத் தந்தையாக இருந்த வணபிதா ஜிம் பிறவுண் அடிகளாரும் காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## மஹோற்சவம்

வல்வெட்டி வேவில் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெற்று வருகின்றது.

15ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 17 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 18ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 19, 21 ஆம்திகதிகளில் முறையே தீர்த்தம்,பூங்காவனம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (அ-7)

## அலங்கார உற்சவம்

நல்லையம்பதி ஸ்ரீமத் நல்லை நாயகி சமேத நல்லைநாத சிவன் தேவஸ்தான துர்க்காதேவி அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர் ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

16,17 ஆம் திகதிகளில் முறையே குதிரை வாகனம், சப்பைரதமும் 18ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 8மணிக்கு தேர்த்திருவிழாவும், 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (அ-7)

## பிற்போடப்பட்டுள்ளது

இன்று நடைபெறவிருந்த, வட்டுக்கோட்டை தெற்கு கிராம மாதர் அபிவிருத்தி சங்கப் பொதுக்கூட்டம் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பிற்போடப்பட்டுள்ளதாகவும் விடுமுறை தினமொன்றில் பொதுக்கூட்டம் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படு வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## கண்கள் பெற்ற பாக்கியம்

எண்டிசையு மிருந்துவந்த இறையடிய ரெல்லாம்
இனியதிரு நடனமிடு மெழில்நடரா ஜர்க்கு
மண்மகிழ விண்மகிழ மறையவர்கள் செய்த
மங்கலச் சங்கபிஷேக மாட்சியினைக் கண்டார்
கண்கள்பெற்ற பாக்கியத்தை எண்ணிக்களி கொண்டார்
காரைசிவ னாலயத்தின் கருணைமழை நனைந்தார்
திண்ணபுரத் தாடலிறைத் திருப்பொலிவில் அந்தத்
தில்லைநட ராஜனையே கண்டுளம் மகிழ்ந்தார்

தாயெனத்தந் தையெனவித் தாரணியைக் காத்துத்
தனியீழச் சிதம்பரத்தி லாடுஞ்சிவ னார்க்கு
தூய சிந்தை யோடுபல திரவியங்கள் சொரிந்து
தோத்திரங்கள் திருமுறைகள் சொல்லித்துதி செய்து
ஆயிரத்தெட் டுக்கலச சங்கிற் கங்கை நீரால்
ஆதிசைவ ராற்றியநல் லபிஷேக மான
தூயமுழுக் குக்கண்ட கண்ணேதான் கண்ணே
சுந்தரத்தாண் டவங்கண்ட கண்ணேதான் கண்ணே

-சிற்பி-

அண்மையில் காரைநகர் ஈழத்துச் சிதம்பர நடராஜப் பெருமானுக்கு நடைபெற்ற 1008 கலச சங்காபிஷேகத்தை தரிசிக்கும் பாக்கி யம் பெற்ற கவிஞர் சி.சிவசரவணபவனின் (சிற்பி) ஆனந்த அனுபவம்.



செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு செஞ்சிலுவை சர்வதேசக் குழு (ICRC) யாழ்ப்பாண அலுவலகத்தினால் கடந்த 8ஆம் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட ஏழாவது வருடாந்த இரத்ததான ICRC நிகழ்வு யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்றது. ICRC யாழ்.வதிவிடப் பிரதிநிதி வலேறி ஒபர்ட் உட்பட 20 ICRC அலுவலர்கள் இரத்ததானம் வழங்கினர்.

# மின்வெட்டை இல்லாமல் செய்வது எப்படி?

## March 15 முதல் மின்சார சபையால் அறவிடப்படுகின்ற மேலதிக கட்டணத்தை குறைப்பது எப்படி?

தற்போது யாழ் மாவட்டத்தில் 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட மின்பாவனையாளர்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் மாலை வேளையில் எந்தவித தடையுமின்றி மின்சாரத்தை வழங்க வேண்டுமாயின் 35MW மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்க வேண்டும். ஆனால் தற்போது சுன்னாகத்திலுள்ள அக்கிறிக்கோ நிறுவனத்தால் 15MW உம், சுன்னாகத்திலுள்ள மின்சாரசபையால் 3 MW உம், காங்கேசன்துறையிலுள்ள Coolair நிறுவனத்தினால் 7MW உம் உற்பத்தி செய்யப்பட்டு மொத்தம் 25 MW மின்சாரமே வழங்கப்படுகின்றது. 10MW மின்சாரம் போதாமையிலே மாலை நேரங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இந்த 10MW உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுவதற்கு ஆகக் குறைந்தது 6மாதம் தொடக்கம் 1 வருடமோ ஆகலாம். அதுவரை மின்வெட்டு அமுலில் இருக்கும். இந்த மின்வெட்டினால் 90ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மின்பாவனையாளரும் சாதாரண மின்குமிழிற்கு பதிலாக *சக்திசேமிப்பு மின்குமிழைப்* பயன்படுத்தி மின்வெட்டை இல்லாமல் செய்யலாம். அதேவேளை அதிகளவு மின்சார கட்டணத்தை மீதப்படுத்தலாம்.

**வீடுகளில் பயன்படுத்தப்படுகின்ற மின்குமிழ்களின் விபரம்**


100W மின்குமிழ் -3
60W மின்குமிழ் -3
40W மின்குமிழ் -1

இவ்வகை மின்குமிழ்களில் 80% மின்சக்தியானது வெப்பமாக வீணாக விரயமாக்கப்படுகின்றது.20% மின்சக்தி மட்டுமே ஒளிச்சக்தியாக பெறப்படுகின்து. இவ்வாறு ஒவ்வொரு வீடுகளில் சராசரியாக 416W வரையான மின்சக்தி வீணாக வெப்பமாக விரயமாக்கப்படுகின்றது. இவ்வாறு 50ஆயிரம் மின் பாவனையாளர்களினால் வீணாக வெப்பமாக விரயமாக்கப்படுகின்ற

$$மொத்தவலு = \frac{416 \times 50,000}{1000 \times 1000} = 20.80MW$$

இவ்வாறு செய்யப்படுமாயின் 20.80 மின்சக்தியை மீதப்படுத்தலாம்.

**சக்தி சேமிப்பு மின்குமிழ்**



8W
9W
11W
13W
15W
18W
20W
22W

சாதாரண மின்குமிழிற்கு பதிலாக சக்தி சேமிப்பு மின்குமிழை பயன்படுத் தும் போது ஒவ்வொரு மின்பாவனையாளராலும் மீதப் படுத்தக்கூடிய மின்சக்தியின் அளவு


| சாதாரண மின்குமிழ் | சக்தி சேமிப்பு மின்குமிழ் |
|---|---|
| 100W - 03 | 20W -03 |
| 60 W -03 | 12 W -03 |
| 40W -01 | 8 W -01 |
| 520W | 104W |

சாதாரண மின்குமிழ் நாளொன்றிற்கு 4மணித்தியாலம் பயன்படுத்தப்படும் போது 1மாதத்தில் செலவாகும் மின்சக்தி

$$= \frac{520 \times 4 \times 30}{1000} = 62.4 \text{ யூனிற்}$$

**சாதாரண மின்குமிழ்**

- 40W
- 45W
- 55W
- 65W
- 75W
- 90W
- 100W
- 110W



இதற்குப் பதிலாக சக்தி சேமிப்பு மின்குமிழைப் பயன்படுத்தும்போது 1ம் மாதத்தில் செலவாகும் சக்தி=

$$\frac{104 \times 4 \times 30}{1000} = 12.48 \text{ யூனிற்}$$

*1 மாதத்தில் சாதாரண மின்குமிழிற்குப் பதிலாக சக்தி சேமிப்பு மின்குமிழை பயன்படுத்தும் போது மீதப்படுத்தப்படும் மின் சக்தியினளவு=62.4-12.48=49.92*

தற்போது ரியூப் லைற்றுக்களில் 40% மின்சக்தியை மீதப்படுத்தக் கூடிய சோக் விற்பனை செய்யப்படுகின்றது.

இதனைப் பயன்படுத்தி ரியூப்லைற்றில் செலவாகும் மின்சக்தியில் 40%ஐ மீதப்படுத்தலாம்.

**அட்டவணை I**

*வீடுகளுக்கான மின்கட்டண விபரம்*

| மின் அலகு | கட்டணம் |
|---|---|
| 1-30வரை | 150.00 |
| 31 | 214.00 |
| 31-60 | 330.00 |
| 61 | 425.00 |
| 61-90 | 585.00 |
| 91 | 1273.00 |
| 91-120 | 1650.00 |
| 121 | 1820.00 |
| 121-180 | 2664.00 |
| 181 | 3619.50 |
| 181-240 | 4470.00 |
| 241 | 5729.00 |
| 360 | 8514.00 |
| 361 | 9945.00 |
| 600 | 16,470.00 |
| 601 | 22,532.50 |

**அட்டவணை II**

கோயில்களுக்கான மின்கட்டண விபரம்

| மின் அலகு | கட்டணம் |
|---|---|
| 29 | 132.00 |
| 30 | 180.00 |
| 87 | 481.00 |
| 88 | 1119.00 |
| 116 | 1447.00 |
| 117 | 1611.00 |
| 174 | 2352.00 |
| 175 | 3293.00 |
| 232 | 4312.40 |
| 233 | 4633.50 |
| 338 | 6876.00 |
| 339 | 9164.00 |

*வியாபார நிறுவனத்திற்கான மின்கட்டண விபரம்*

240.00 உடன் ஒவ்வொரு யூனிற்றுக்கும் 19.50 வீதம் அறவிடப்படுகின்றது.

*வீடொன்றில் பயன்படுத்தப்படுகின்ற மின் இலத்திரனியல் உபகரணங்களும் அவற்றின் மாதாந்தம் செலவாகும் மின்சக்தியின் அளவும்*

மின்குமிழ் 40 Unit தொடக்கம் 80Unit வரை
Rice cooker 30 Unit தொடக்கம் 45Unit வரை
Hot plate 30 Unit தொடக்கம் 60Unit வரை
மின்மோட்டார் (வீட்டுப்பவானை) 10Unit தொடக்கம் 15Unit வரை
குளிர்சாதனப் பெட்டி 20Unit தொடக்கம் 40Unit வரை
மின்னழுத்தி 05Unit தொடக்கம் 08Unit வரை
மின்விசிறி 10Unit தொடக்கம் 20Unit வரை
T.V 10Unit தொடக்கம் 15Unit வரை

மின்சார சபையால் மார்ச் 15ஆம் திகதி முதல் அறவிடப்படுகின்ற மின்சாரக் கட்டண விபரம் (அட்டவணை I. அட்டவணை II)

ஒவ்வொரு மின்பாவனையாளர்களும் சராசரி 6 சக்திசேமிப்பு மின்குமிழ்களை பயன்படுத்துவதன் மூலம் (ரூ.2ஆயிரத்தை செலவு செய்வதன் மூலம்) மாதாந்தம் 150 ரூபா முதல் ஆயிரத்து 800 வரை மின்சார கட்டணத்தை மீதப்படுத்தலாம். அத்துடன் மின் வெட்டை இல்லாமல் செய்யலாம். இவ்வாறான சக்திசேமிப்பு மின்குமிழ்களை மானிப்பாயிலுள்ள "சுந்தர்சன் நிறுவனம்" வேறு நிறுவனங்களினாலும் ஒரு வருடம் முதல் இரண்டு வருட உத்தரவாதத்துடன் தரமான சக்தி சேமிப்பு மின்குமிழ்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

குறிப்பு: 70ஆயிரத்து மின் பாவனையாளர்களும் கல்வி கற்கும் மாணவர்களின் நன்மை கருதி ஆகக் குறைந்தது இரண்டு 100W சாதாரண மின்குமிழ்களுக்குப் பதிலாக இரண்டு 20W சக்தி சேமிப்பு மின்குமிழ்களைப் பயன்படுத்தினால் (800ரூபாவை செலவு செய்தால்) 11.2 MW மின்சக்தியை மீதப்படுத்தலாம். மின்வெட்டையும் இல்லாமல் செய்யலாம்.

*விபரங்களை அறிய விரும்புவோர் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.*

JAFFNA TECHNICAL INSTITUTE
45, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

# இன்று ஒரு தகவல்

## கரணங்கள்

நேற்று வரைக்கும் அந்த ஆள் உறுதியாகத்தான் இருந்தான். இன்றைக்கு திடீரென்று கரணம் அடித்து விட்டான் என்று சொல்வதுண்டு. கரணம் அடித்து விட்டான் என்றால் ''பல்டி'' அடித்துவிட்டான் என்று அர்த்தம்.

மனிதர்களுடைய சுபாவத்தின் அடிப்படையில் அவர்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர் ஆன்மிகவாதிகள். அதாவது

கஜகரணம் போடுபவர்கள்

அஜகரணம் போடுபவர்கள்

கோகரணம் போடுபவர்கள்

கஜம் என்றால் யானை. அஜம் என்றால் ஆடு. கோ என்றால் பசு. முதலாவது வகையினர் கஜகரணம் போடுபவர்கள். யானை எப்பொழுதும் நான்கு கால்களையும் ஊன்றி நிற்காது. ஒன்றை மாற்றி ஒன்றைத்தூக்கி வைத்துக்கொண்டு தான் நிற்கும்.

அதுமாதிரி, இவர்களெல்லாம் ஒரே விஷயத்தில் தங்களுடைய கருத்தை செலுத்தாமல் பல விஷயங்களில் ஈடுபட்டுக்குழம்புவார்கள். ஒரு விஷயத்திலும் உறுதியாக இருக்க மாட்டார்கள்.

அஜகரணம் போடுபவர்கள் எப்படிதெரியுமா? ஆட்டின் வாலைப்பிடித்து யாராவது இழுத்தால் உடனே அது தலையைத் தொங்கப்போட்டுக்கொள்ளும். அதுமாதிரி சில மனிதர்கள் உண்டு.

அவர்களின் குறைகளை யாராவது சுட்டிக்காட்டினால் போதும், உடனே அவர்களை வெறுக்க ஆரம்பித்துவிடுவார்கள். அவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டார்கள். ஆடு மாதிரி தலையைக் குனிந்து கொண்டே போய்விடுவார்கள்.

மூன்றாவது வகையினர் கோகரணம் போடுபவர்கள். கோ என்றால் பசு. பசுவின் உடம்பில் எந்த இடத்தில் விரலால் தொட்டாலும் அந்த இடம் உணர்ச்சிவசப்பட்டு உடம்பு சிலிர்க்கும். அது மாதிரி எந்த ஒரு குறையைச் சுட்டிக் காட்டினாலும், அதைப் புரிந்துகொண்டு மன்னிப்புக் கேட்டுத் திருந்துவார்கள்.

இருப்பினும், இந்தக்காலத்தில் எல்லாம் காரியக் கரணம் போடுவர்கள் தான் அதிகம். ஏதாவது காரியத்தைச் சாதிக்க வேண்டுமானால், கரணம் போடுவது காலில் விழுவது எல்லாமே செய்வார்கள்.

புத்தரிடமே கரணமடித்தான் ஓர் ஆள். அது என்ன கதை தெரியுமா? ஒருநாள் புத்தர் லேசாகக் கண்ணைத் திறந்தார். உடனே ''இவன் எங்கள் வழிகாட்டியே! உங்களை மாதிரி ஒரு சிறந்த ஞானி இந்த உலகத்திலேயே இல்லை. உங்களைப் போல் அன்பு, அருள் உடையவர்கள் யாருமே இல்லை. எல்லாப் பெருமைக்குரியவரும் நீங்கள் தான்'' என்று புகழ ஆரம்பித்தான்.

இதைக்கேட்டதும் புத்தர் "சீடனே! எனக்கு முன்னால் தோன்றிய ஞானிகளை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார். "தெரியாது ஐயா'' என்றான் அவன். "சரி, இனி எனக்கு அடுத்து தோன்றப்போகும் ஞானிகளையாவது தெரியுமா?'' என்றார். அதற்கும் தெரியாது என்றான்.

''சரி, என்னையாவது நீ முழுமையாகப் புரிந்து கொண்டிருக்கிறாயா?'' என்று கேட்டார். ''இல்லை, ஐயா!'' என்றார். ''அப்படியிருக்க எதற்காக என்னை அலங்காரமான வார்த்தைகளால் குறிப்பிட்டாய்? அதனால் எந்தப் பிரயோசனமும் இல்லையே!'' என்றார் புத்தர். இவன் பேசாமல் தலையைக்குனிந்து கொண்டே போய் விட்டான்.

கரணத்தில் தோப்புக்கரணம் என்றும் ஒன்று உண்டு. தவறு செய்த மாணவன் ஆசிரியர் முன்னால் போடுவது ஒருவகை. பாவம் செய்த மனிதன் கடவுள் முன்னால் போடுவது இன்னொருவகை.

எனக்குத் தெரிந்த ஒருவர் மெதுவாக அசைந்து, அசைந்து நடந்துவந்தார். என்ன விஷயம்? என்று கேட்டேன். ''இப்பத்தான் 108 தோப்புக் கரணம் போட்டு விட்டு வருகிறேன்'' என்றார். ''கோவிலிலிருந்துதான் வரு கிறீர்களா?'' என்று கேட்டேன். "இல்லை வீட்டிலிருந்து தான் வருகிறேன்'' என்றார் அசட்டுத்தனமாக.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# சிவில் உரிமைகள் மதிக்கப்படும் நாடுகளின் பட்டியலின் விளிம்பில் இலங்கை

## சுதந்திர இல்லம் அறிவிப்பு

(கொழும்பு)

அரசியல் சுதந்திரம் மற்றும் சிவில் உரிமைகள் மதிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கை விளிம்பில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. சுதந்திரம் மற்றும் சுதந்திரம் அற்ற நாடுகளுக்கிடையில் இலங்கை இருப்பதாக சுதந்திர இல்லம் வெளியிட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள்து.

சுதந்திரம் உள்ள நாடுகளில் இந்தியா உள்ளடக்கப்பட்டுள்ளது. மனித உரிமை அறிக்கைகளில் மிகவும் மோசமான நாடுகள் எனும் தலைப்பிலான பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள மிகவும் மோசமான எட்டு நாடுகளின் பட்டிய லில் மியான்மர் , வடகொரியா , கியூபா , லிபியா ஆகிய [illegible]டுகள் உள்ளடக்கப்பட்[illegible]ன.

பாகிஸ்தான் ஓ[illegible]வு சுதந்திரமான நாடென அந்தப் பட்டியலில் தெ[illegible]விக்கப்பட்டுள்ளது. கடந்த 2007ஆம் ஆண்டு மிகவும் மோசமான நிலையில் இருந்த பாகிஸ்தான் அண்மையில் அங்கு நடைபெற்ற பொதுத்தேர்தலைத் தொடர்ந்து சுதந்திரமான நாடுகளின் பட்டியலில் முன்னேற்றம் கண்டுள்ளது. இலங்கை அரசியல் உரிமைகளில் 4ஆவது இடத்திலும் சிவில் உரிமைகளில் 4ஆவது இடத்திலும் உள்ளது. (அ-5)

# அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமரர் பேராசிரியர் செல்வரத்தினம் இராஜரத்தினத்தின் (ரோனி) அஞ்சலி நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் கைலாசபதிகலையரங்கில் நடைபெறும்.

இதில் பேராசிரியர் இராஜரத்தினம் அவர்களது மாணவர்கள், நண்பர்கள், அனுதாபிகள்யாவரையும்கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறைத் தலைவர் ந.பேரின்பநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# நளினியும் முருகனும் மீண்டும் சந்திப்பு

ராஜீவ்காந்தி கொலைக் கைதிகளான நளினி, முருகன் இரு வரும் வேலூர் சிறையில் மீண்டும் சந்தித்துள்ளனர். பிரியங்கா காந்தி நளினியை சந்தித்ததன் பின்னர் நளினி முருகனை சந்திக்காமை குறித்து பல விமர்சனங்கள் எழுந்தன.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற முருகனும், ஆயுள் தண்டனை கைதியான முருகனின் மனைவி நளினியும், வேலூர் சிறையில் உள்ளனர். இவர்கள் இருவரும் நீதிமன்ற உத்தரவிற்கமைய மாதம் இருமுறை சந்தித்துப் பேசிக்கொள்வது வழமையாகும்.

இந்நிலையில் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா வேலூர் சிறையில் நளினியை கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி சந்தித்தார். இந்த சந்திப்பு குறித்து இவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதை அடுத்து அதன் பின்னர் இருவரும் சந்தித்துக் கொள்வதை தவிர்த்து வந்தனர்.

இந்த நிலையிலேயே நளினியை முருகன் நேற்று முன்தினம் சுமார் 1 1/2 மணி நேரம் சந்தித்துப் பேசியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-7)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனத்தில் சினிமாத்துறை தொடர்பாக ஆறு மாதகால பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது. இதில் பங்குகொள்ள விரும்புவோர் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர். இதற்கான படிவங்களை இம்மாதம் 30ஆம் திகதி வரை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன கலாசார பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜூன் மாதம் 6ஆம் திகதி வரை பூரணப்படுத்தப்பட்ட படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் 303 பௌத்தாலோக மாவத்தை கொழும்பு 7, தொலைபேசி 2585721. (அ-5)

# இலங்கை - பாக்.இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் இராணுவத் தளபதிகள் தீர்மானம் - திவயின தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் இராணுவ புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்துவதற்கு இராணுவ தளபதிகள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கையின் இராணுவ தளபதி சரத் பொன்சேகா பாகிஸ்தான் இராணுவ தளபதி பாவேஸ் கியானி மற்றும் பாகிஸ்தானின் ஒன்றிணைந்த படை முன்னெடுப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ரகெமஜீட் ஆகியோரே மேற்படி இராணுவ புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளனர்.

இவ்வொப்பந்தத்தை அடுத்து இலங்கை இராணுவத்தினருக்கு பல்வேறு தரப்புக்களிலிருந்தும் இராணுவ பயிற்சிகளை வழங்க பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளது. இலங்கை இராணுவத்தில் குறித்த சிலருக்கு வழங்கப்பட்ட பயிற்சி களை இராணுவத்திலுள்ள பலருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தூதுவராலய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவை தவிர இலங்கை இராணுவத்திற்கு தேவை ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் இராணுவ ஆயுதங்களை வழங்கவும் பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளதாக மேற்படி தகவல் பிரிவு மேலும் தெரிவித்தது. (அ-5)

# இராசிபலன்

12.05.2008

(சித்திரை 30. திங்கட்கிழமை)

ஆயிலியம் முன்னிரவு 06.30 மணிவரை

அட்டமி பின்னிரவு 02.28மணிவரை

இராகுகாலம் 07.24-08.54 மணிவரை

சுபநேரம் 11.54-01.24 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய நன்மை, கூட்டுமுயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிகசெலவு, ரோகநிலை, திடீர்நன்மை. |
| கடகம் | மாதர்நட்பு, வெகுமானம், நல்ல முயற்சி, தெய்வசிந்தை. |
| சிங்கம் | உஷ்ணநிலை, பிறருக்கு உதவுதல், காரியதாமதம், சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், தனதானிய சேர்க்கை, ஆனந்தம். |
| துலாம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரியசித்தி. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், புத்திரரால் கவலை, பிரயாணம், பணவிரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரியதடங்கல், தர்மம், போசனசுகம். |
| மகரம் | நல்லமுயற்சி, தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | காரிய அனுகூலம், கீர்த்தி, போசனசுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்ந்தநிலை, முயற்சி தாமதம், தனவிரயம், போசனசுகம். |

வளவன்

# 'வேலைக்கு உணவு' திட்டம் தற்காலிக இடை நிறுத்தம்

## உலக உணவு திட்ட அமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

வேலைக்கு உணவு என்ற திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு உலக உணவுத்திட்ட நிறுவனம் தீர்மானித்துள்ளது என்று உலக உணவுத்திட்ட அமைப்பின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் ஜீன் வெஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உள்ளூரில் இடம்பெயர்ந்த மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளின் அளவுகளும் குறைக்கப்படவுள்ளன. வேலைக்கு உணவு என்ற திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு தேவையான உதவிகள் எமக்கு கிடைக்கவில்லை. எனவே தான் இதனை நிறுத்த முடிவுசெய்துள்ளோம். இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் பலனடைந்து வருகின்றனர். ஆனால் இந்த முடிவினால் அவர்கள் அனைவரும் பாதிப்படைய நேரிடலாம். எனினும் எமக்கு வேறு வழிகள் இல்லை.

பாதுகாப்பு உதவிகள், மறுசீரமைப்பு உதவிகள், சிறார் சத்துணவுத்திட்டம் என்பனவும் குறைக்கப்படலாம். எமது முடிவு தொடர்பாக அரசிற்கும் நாம் தெரிவித்துள்ளோம். இந்தத்திட்டத்தை தொடர்வதற்கான உதவிகள் எமக்கு மிகவும் குறைவாகவே கிடைக்கின்றன. உணவுத் தட்டுப்பாடுகள், அதற்கான பொருட்களுக்கான தட்டுப்பாடு என்பனவும் எமது திட்டத்தை பாதித்துள்ளது.

உலகில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையும் இலங்கையை கடுமையாக பாதித்துள்ளது. இதற்கான மாற்று வழிகள் தொடர்பாக நாம் அரசுடன் பேசி வருகின்றோம். இலங்கை மக்கள் தமது வருமானத்தில் 40 விகிதத்தை உணவுக்காக செலவிட்டு வருகின்றனர். அதுவே அவர்களை வறுமை நிலைக்கும் தள்ளி வருகின்றன. எமது எதிர்காலத் திட்டத்திற்கு 36 மில்லியன் டொலர்கள் தேவை.

உலகம் முழுவதிலும் நாம் 760 மில்லியன் டொலர்களை எமது திட்டத்திற்காக கோரியுள்ளோம் என்றார் அவர். இதனிடையே உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதனால் சிறார்களின் சத்துணவுத் திட்டம் கடுமையாக பாதிப்படைந்துள்ளது என்று யூனி செஃப் அமைப்பின் பேச்சாளர் கோடன் வெய்ஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# கிழக்கு மாகாண சபைத் தேர்தல் -முடிவுகள்

## மட்டக்களப்பு மாவட்டம்

| கட்சிகள் | பட்டிருப்புதேர்தல் தொகுதி | | கட்சிகள் | மட்டக்களப்புதேர்தல் தொகுதி | | கட்சிகள் | கல்குடாதேர்தல் தொகுதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % | | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % | | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
| ஐ. ம. சு. கூ | 14379 | 42.89 | ஐ. ம. சு. கூ | 52053 | 58.78 | ஐ. ம. சு. கூ | 36731 | 66.81 |
| ஐ. தே.க | 11829 | 35.28 | ஐ. தே.க | 29770 | 33.62 | ஐ. தே.க | 15673 | 28.51 |
| த.ஜ.தே.கூ. | 3594 | 10.72 | த.ஜ.தே.மு. | 3222 | 3.64 | ஈ.பி.டி.பி. | 1421 | 2.58 |
| ஈ.பி.டி.பி. | 2612 | 7.79 | ஈ.பி.டி.பி. | 1199 | 1.35 | த.ஜ.தே.கூ. | 443 | 0.81 |

### தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
|---|---|---|
| ஐ. ம. சு. கூ | 2159 | 51.72 |
| ஐ. தே.க | 1282 | 30 .71 |
| த.ஜ.தே.கூ. | 454 | 10.88 |
| ஈ.பி.டி.பி. | 135 | 3.23 |

### இடம்பெயர்ந்தோர் வாக்களிப்பு முடிவுகள்

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
|---|---|---|
| ஈ.பி.டி.பி. | 51 | 42.5 |
| ஐ. தே. க | 48 | 40 |
| ஐ. ம.சு.கூ | 19 | 15.83 |
| த.ஜ.தே.கூ. | 1 | 0.83 |

### மட்டக்களப்பு மாவட்ட இறுதி முடிவுகள்

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % | ஆசனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஐ. ம. சு. கூ | 105341 | 58.09 | 6 |
| ஐ. தே.க | 58602 | 32.31 | 4 |
| த.ஜ.தே.கூ. | 7714 | 4.25 | 1 |
| ஈ.பி.டி.பி. | 5418 | 2.99 | - |

## திருகோணமலை மாவட்டம்

| கட்சிகள் | திருகோணமலை தேர்தல் தொகுதி | | கட்சிகள் | மூதூர்தேர்தல் தொகுதி | | கட்சிகள் | சேருவிலதேர்தல் தொகுதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % | | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % | | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
| ஐ. தே. க | 28146 | 62.26 | ஐ. தே. க | 28233 | 59.08 | ஐ.ம.சு.கூ | 21915 | 61.47 |
| ஐ. ம.சு.கூ | 13828 | 30 .59 | ஐ. ம.சு.கூ | 18451 | 38 .61 | ஐ. தே.க | 10855 | 30 .45 |
| ம.வி.மு. | 1408 | 3. 11 | ம.வி.மு. | 160 | 0. 33 | ம.வி.மு. | 2886 | 6.41 |

### தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
|---|---|---|
| ஐ. ம. சு. கூ | 4938 | 62.17 |
| ஐ. தே.க | 2481 | 31.24 |
| ம.வி.மு. | 411 | 5.17 |

### இடம்பெயர்ந்தோர் வாக்களிப்பு முடிவுகள்

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
|---|---|---|
| ஐ. தே. க | 1143 | 85.3 |
| ஐ. ம.சு.கூ | 166 | 12.39 |
| ஐ.சோ.க. | 10 | 0.75 |

### திருகோணமலை மாவட்ட இறுதி முடிவுகள்

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % | ஆசனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஐ. தே.க | 70858 | 57.37 | 5 |
| ஐ. ம.சு.கூ | 58298 | 42.99 | 4 |
| ம.வி.மு. | 4266 | 3.09 | 1 |

## அம்பாறை மாவட்டம்

### அம்பாறை தேர்தல் தொகுதி

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 47319 | 57.10 |
| ஐ.தே.கட்சி | 31386 | 37.87 |
| ம.வி.மு. | 3696 | 4.46 |

### கல்முனை தேர்தல் தொகுதி

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
|---|---|---|
| ஐ.தே.க. | 27596 | 66.46 |
| ஐ.ம.சு.கூ. | 13478 | 32.44 |
| ஐ. தே. கூ. | 174 | 0.42 |

### பொத்துவில் தேர்தல் தொகுதி

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 54619 | 58.56 |
| ஐ.தே.க. | 37488 | 40.19 |
| ம. வி. மு. | 490 | 0.53 |

### சம்மாந்துறை தேர்தல் தொகுதி

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 24119 | 52.22 |
| ஐ.தே.க. | 21401 | 46.34 |
| சுயேட்சைக் குழு 22 | 253 | 0.55 |

### தபால் மூல வாக்களிப்பு முடிவு


| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 4722 | 55.24 |
| ஐ.தே.க. | 3401 | 39.79 |
| ம. வி. மு. | 353 | 4.13 |


### அம்பாறை மாவட்ட இறுதி முடிவு

| கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் % | ஆசனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 144247 | 52.96 | 8 |
| ஐ.தே.க. | 121272 | 44.52 | 6 |
| ம. வி.மு | 4745 | 1.75 | 0 |
| ஐ. தே. கூ. | 597 | 0.22 | 0 |

## கிழக்கு மாகாணசபைத் தேர்தல் இறுதி முடிவுகள்

| கட்சிகள் | கிடைக்கப்பெற்ற வாக்குகள் | வாக்குவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 308886 | 52.21 | 20 |
| ஐ.தே.க. | 250732 | 42.03 | 15 |
| ம. வி. மு. | 9390 | 1.59 | 01 |
| த.ஜ. தே.கூ. | 7714 | 1.30 | 01 |
| ஈ.பி.டி.பி. | 5418 | 0.92 | - |



### பாலாஜி ஹட்ரிக்

# சென்னை அசத்தல் வெற்றி யுவராஜ் அணி பரிதாபம்

(சென்னை)

லக்சுமிபதி பாலாஜி ஹட்ரிக் சாதனை படைக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது-20 தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்ற லீக் சுற்றின் 31ஆவது ஆட்டத்தில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யுவராஜ் சிங் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பத்திரிநாத், தோனியும் அதிரடியான அரைச்சதம் விளாச நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பத்திரிநாத் 47 பந்துகளில் (6பவுண்டரிகள் 4 சிக்ஸர்கள் உட்பட)64 ஓட்டங்களையும் அணித்தலைவர் தோனி 43பந்துகளில் (2 பவுண்டரிகள் 4 சிக்ஸர்கள் உட்பட)60 ஓட்டங்களையும் மற்றும் ரெய்னா 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சிறிநாத் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 182 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி ஆரம்பத்தில் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியபோதும் இறுதியில் பாலாஜியின் பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது.

இறுதியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 18 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இதில் மார்ஷ் 38 பந்துகளில் (3 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 58 ஓட்டங்களையும் இர்பான் பதான் 18 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 40 ஓட்டங்களையும் மற்றும் சர்வான் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் சிறப்பாக பந்துவீசி வெற்றிக்கு திருப்பு முனையாக ஜொலித்த லக்சுமிபதி பாலாஜி 4 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதில் இர்பான் பதான் பியூஸ் சாவ்லா மற்றும் வீ.ஆர்.வி.சிங் ஆகியோரை அடுத்தடுத்து மூன்று பந்துகளில் வீழ்த்தி ஐ.பி.எல். இருபது -20 தொடரில் முதல் முதலாக ஹட்ரிக் சாதனை படைத்தார். இவரே ஆட்ட நாயகனாகவும் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் ஆடிய 9-வது போட்டியில் 6-வது வெற்றியைப் பெற்றது.

இதேவேளை இத்தோல்வியின் மூலம் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி சந்திக்கும் மூன்றாவது தோல்வி இதுவாகும்.

(5)




## ஆஸி.வீரர்கள் பண்பானவர்கள்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் விளையாட்டு உணர்வும் பண்பும் மிக்கவர்கள் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை (சி.ஏ) ஆய்வில் 83 சதவீத அவுஸ்திரேலியர்கள் தங்கள் அணியினர் இளைய தலைமுறைக்கு சிறந்த எடுத்துக் காட்டாக இருப்பதாகவும் போட்டி மனப்பான்மையும் ஆக்ரோஷமும் இருந்தாலும் விளையாட்டு உணர்வும் பண்பும் உடையவர்கள் எனவும் தெரிவித்துள்ளனர். (5)

## அசாருதீன், ஜடேஜா போன்று ஹர்பஜனுக்கும் ஆயுள்தடை விதிக்கலாம் -நானாவதி

(அகமதாபாத்)

சிறிசாந்தை, ஹர்பஜன் சிங் அறைந்த விவகாரத்தில் யாருக்கும் தண்டனை வழங்கும்படி அறிக்கையில் பரிந்துரை செய்ய வில்லை என்று விசாரணைக்குழு அதிகாரி நானாவதி கூறியிருக்கிறார்.

ஆனால் சம்பவத்தில் குற்றம் நிரூபணமானால் வீரர்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்ற கேள்விக்கு பதிலளித்த நானாவதி, வீரர்கள் மீதான குற்றப்பிரிவு 4இன் கீழ் வருவதால் அவர்களுக்கு ஏராளமான போட்டிகளில் தடை விதிக்கலாம். அதிகபட்சமாக ஆயுள் காலத் தடை விதிக்கவும் முடியும் என்றார். (5)

## இரண்டாம் இடத்தில் சென்னை

**ஐ.பி.எல்.தொடருக்கான புள்ளிப் பட்டியலில் சென்னை அணி இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. முதலிடத்தில் ராஜஸ்தான் இருக்கிறது.**

**இத்தொடரில் ஒவ்வொரு அணியும் பெற்றுள்ள புள்ளிகளின் விபரம்,**

| அணி | தலைவர் | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி | ஓட்டவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| ராஜஸ்தான் | வோர்ன் | 8 | 6 | 2 | 12 | +0.605 |
| சென்னை | தோனி | 9 | 6 | 3 | 12 | +0.104 |
| பஞ்சாப் | யுவராஜ் | 8 | 5 | 3 | 10 | +0.272 |
| டில்லி | சேவாக் | 7 | 4 | 3 | 8 | +0.654 |
| கொல்கத்தா | கங்குலி | 7 | 3 | 4 | 6 | +0.461 |
| மும்பை | டெண்டுல்கர் | 7 | 3 | 4 | 6 | -0.455 |
| டெக்கான் | லக்ஸ்மன் | 8 | 2 | 6 | 4 | -0.240 |
| பெங்களூர் | ராவிட் | 8 | 2 | 6 | 4 | -1.309 |

*குறிப்பு:-* **நேற்று முன்தினம் சென்னை, பஞ்சாப் அணிகள் மோதிய போட்டிவரை**

## மேற்கிந்திய சுற்றுலாவின் ஆரம்ப போட்டிகளிலிருந்து மைக்கல் கிளார்க் விலகல்

(சிட்னி)

அவுஸ்திரேலிய அணியின் மேற்கிந்திய சுற்றுலாவின் ஆரம்பப் போட்டிகளில் இருந்து அவுஸ்திரேலிய அணியின் உப தலைவர் மைக்கல் கிளார்க் விலகியுள்ளார்.

கிளார்க்கின் காதலியின் தந்தை கடும் உடல் நலக்குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளமையே இதற்கான காரணமாகும்.

அடம் கில்கிறிஸ்ட் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றபின் மைக்கல் கிளார்க் அவுஸ்திரேலிய் அணியின் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் அணி உப தலைவராக மேற்கிந்தியத் தீவுகளிலேயே கிளார்க் அறிமுகமாகவிருந்தார்.

எனினும் கிளார்க்கின் வேண்டுகோளின் பேரில் கிளார்க்கிற்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கிளார்க்கின் காதலியான லாரா பிங்களின் தந்தை கிரஹம் பிங்கிள் ஒருவருட காலமாக ஈரல் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குடும்பக் காரணங்களினால் அவுஸ்திரேலிய அணியுடன் மேற்கிந்தியத் தீவுகளுக்கு பயணம் செய்யமாட்டேன் என்றும்

ஆனால் இயன்றவரை விரைவாக அங்கு செல்வதற்கு முயற்சிக்கிறேன் எனவும் கிளார்க் தெரிவித்துள்ளார்.

கிளார்க்கின் விலகலைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய அணியின் உபதலைவர் பதவி மைக்கல் ஹஸிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிரட் ஹொட்ஜ்ஜும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பிரட் ஹொட்ஜ் தற்போது இந்திய பிரிமியர் லீக்கில் கொல்கத்தா ரைடர்ஸ் சார்பாக விளையாடுகிறார்.

கிளார்க் அணியில் இணையும் வரை ஹொட்ஜ் மேற்கிந்தியத் தீவில் இருப் பார் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

டுபாய் அல்லது லண்டனில் வைத்து அவுஸ்திரேலிய அணியுடன் ஹொட்ஜ் இணைந்து கொள்வார்.

(5)

# ஹர்பஜன் முகத்திரை கிழிந்துவிட்டது ரிக்கி பொன்டிங் கடும் விமர்சனம்

(மெல்போர்ன்)

சகவீரர் சிறிசாந்த் கன்னத்தில் அறைந்த விவகாரத்தில் இருந்து ஹர்பஜன் இன்னும் திருந்தவில்லை என்பது தெளிவாகிறது என



தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் அவரது முகத்திரை கிழிந்துவிட்டது என்றும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

மொகாலியில் நடந்த ஐ.பி.எல் தொடரின் 10-வது லீக் போட்டியில் யுவராஜின் பஞ்சாப் அணி,மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது.

இப்போட்டி முடிந்ததும் பஞ்சாப் அணியின் சிறிசாந்த் கை குலுக்க வர ஆத்திரமடைந்த ஹர்பஜன் அவரது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தார்.

இது தொடர்பாக ஹர்பஜனுக்கு 11 ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

அடுத்து இந்திய கிரிக்கெட் சபையும் (பி.சி.சி.ஐ) நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இப்பிரச்சினை பற்றி விசாரணை நடத்த வழக்கறிஞர் சுதிர் ஞானாவதியை விசாரணை அதிகாரியாக பி.சி.சி.ஐ நியமித்தது.

ஹர்பஜன்,சிறிசாந்த் நேரில் ஆஜராகி விளக்கமளித்தனர். இதன் அறிக்கை பி.சி.சி.ஐ தலைவர் சரத் பவாரிடம் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இந்நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக முதல் நான்கு போட்டிகளில் விளையாடிய அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங், ஹர்பஜன் தொடர்ந்து தவறுகள் செய்து வருகிறார்.

சக வீரர் என்ற எண்ணம் கூட இல்லாமல் சிறிசாந்தை அறைந்த விவகாரம் மூலம் அவரது முகத்திரை கிழிந்துவிட்டது என்றார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில் தன்னுடன் 20 டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் இணைந்து விளையாடிய சக வீரர் ஒருவரை ஹர்பஜன் அறைந்துள்ளார்.

இதிலிருந்து ஹர்பஜனைப் பற்றி அனைவரும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அவர் மீண்டும் தவறு செய்துள்ளார்.

சிட்னி டெஸ்டின்போது சைமன்ட்ஸிடம் இனவெறியைத் தூண்டும் வகையில் நடந்து கொண்டார். இதில் அவருக்கு முதலில் 3 போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

பின்னர் அது போட்டிச் சம்பளத்தில் 50 சதவீதம் அபராதமாக குறைக்கப்பட்டது.

இதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒருநாள் போட்டிகளில் பந்துவீச தாமதமாகிவிட்டது என எனக்கு பல போட்டி



களில் 30 சதவீத அபராதம் விதிக்கப்பட்டது.

ஹர்பஜனுக்கு அதைவிட சற்றுக் கூடுதல் அபராதம் விதிக்கப்பட்டது அவ்வளவு தான் . இவ்விரண்டுக்கும் வேறு எந்த பெரிய வித்தியாசமும் கிடையாது.

ஐ.பி.எல் தொடர் கிரிக்கெட்டுக்கு பல புதிய ரசிகர்களை கொண்டு வந்துள்ளது. எதையும் சரியாகச் செய்தால் எந்தப் பிரச்சினையும் தோன்றாது.

இதனால் சர்வதேச கிரிக்கெட் பாதிக்கப்படும் என்று கூறிவிடமுடியாது. இவ்வாறு பொன்டிங் தெரிவித்தார்.

(5)

# ரஷ்ய கல்வி 3

கடந்த 2 வாரங்களில் ரஷ்யா சென்று கல்வி பயிலத் தேவையான அடிப்படைகள் பற்றி அறிந்தோம். இந்த வாரம் ரஷ்யாவில் உள்ள சில புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களைப் பற்றியும் மருத்துவக் கல்வி பற்றியும் காணலாம்.

**பார் ஈஸ்டன் நஷனல் பல்கலைக்கழகம் (FAR EASTERN NATIONAL UNIVERSITY)**

ரஷ்யாவின் தலைசிறந்த 5 பல்கலைக்கழகங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்தப் பல்கலைக்கழகம் விளாடி வாஸ்டாக் நகரத்தில் உள்ளது. இங்கு 40 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். உயர் கல்விப் படிப்பிலும் ஆராய்ச்சி படிப்பிலும் 358க்கும் மேற்பட்ட துறைகள் இங்கு படிக்க முடியும்.

வெளிநாட்டு அமைப்புகளுடன் 80க்கும் மேற்பட்ட உடன்பாடுகளை இந்தப் பல்கலைக்கழகம் செய்து கொண்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்துடன் 77 கல்வி நிறுவனங்களும் கல்லூரிகளும் இணைந்துள்ளன. இந்தப் பல்கலைக்கழகம் ரஷ்யாவில் மருத்துவப் படிப்புகளைப் படிக்க விரும்புவருக்கான அடிப்படைப் படிப்புகளைத் தருகிறது. இதேபோல எகாலஜி எனப்படும் சுற்றுச்சூழலியல், மரைன் பயாலஜி, பயோ டெக்னோலஜி, வேதியியல், அப்ளைட் எனர்ஜி, இன்ஸ்டிடியூட் ஓப் பிசிக்ஸ், ஐ.டி.பிரிவுகளிலும் இந்தப் பல்கலைக்கழகம் அடிப்படைப் படிப்புகளைத் தருகிறது. இதன் அடிப்படைப் படிப்புகளுக்கான காலம் 9 மாதங்கள் ஆகும்.




ரஷ்யாவில் உள்ள மரங்கள் மற்றும் மரத் தொழிற் சாலைகளைப் பற்றிப் படிக்கும் புதிய படிப்புகளை இது சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. எவ்வளவு புதுமையான படிப்புகளை இந்தப் பல்கலைக்கழகம் தருகிறது என்பதற்கு இது உதாரணமாகும். இதன் இணையத்தில் **www.fenu.ru.** இனி இதுபற்றிய பிற தகவல்கள்

***பட்டப்படிப்புகள்:-*** ஏற்கனவே குறிப்பிட்டதுபோல பல்கலைக்கழகத்தில் எண்ணற்ற படிப்புகள் தரப்படுகின்றன. பட்டப்படிப்புகள் வழங்கப்படும் பிரிவுகள் இவை அப்ளைட் கணிதம், உயிரியல், வேதியிய்ல், சுற்றுச் சூழலியல், பொருளாதாரம், சுற்றுச்சூழல் உற்பத்தியியல், புவியியல், வரலாறு, சர்வதேச உறவு, இதழியல், சட்டம், மொழியியல், நிர்வாகவியல், கணிதம், இயற்கை அறிவியல், தத்துவம், இயற்பியல், சமூக அறிவியல், மொழி மற்றும் இலக்கியவியல், பாலிகிராபி, மண் அறிவியல், இறையியல் போன்ற பிரிவுகளில் இதன் பட்டப் படிப்புகள் தரப்படுகின்றன.

5 ஆண்டுகளில் முடிக்கக் கூடிய சிறப்புப் பட்டப்படிப்புகளாக வணிகவியல் கணிதம், விளம்பரம், பயோகெமிஸ்ட்ரி, பயாலஜி, வேதியியல், கொம்பியூட்டர் பாதுகாப்பு, கலைப் படிப்புகள், சுற்றுச்சூழலியல், புவியியல், வரலாறு, வீட்டு நிர்வாகவியல் மற்றும் பொருளாதாரம், ஹைட் ராலஜி, உலகப் பொருளாதாரம், இதழியல், சட்டம், வியாபாரம், மெக்கட் ரானிக்ஸ், மெட்டீ ரியலாஜி, கடலியல், இயற்பியல், சமூக அறிவியல், பொது உறவுகள், மனிதவியல், மண் அறிவியல், இறையியல், இராணுவப் பயிற்சிப் படிப்புகளும் உள்ளன.

*பட்டமேற்படிப்புகள்* முதுநிலைப் படிப்புகள் அப்ளைட் ,பயோகெமிஸ்ட்ரி, உயிரியல், வேதியியல், கலாசாரப் படிப்புகள், பொருளாதாரம், புவியியல், வரலாறு, சட்டம், மொழியியல், நிர்வாக வியல், கணிதம், இயற்பியல், சமூக அறிவியல், மண்ணியல், இறையியல் ஆகிய துறைகளில் உள்ளன.

ஆய்வுப் படிப்பு எனப்படும் பி.எச்டி.பிரிவில் பயாலஜி, வேதியியல், மண் அறிவியல், பொருளாதாரம், வரலாறு, சட்டம், தத்துவம், கணிதம், இயற்பியல், சமூக அறிவியல், அரசியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் படிக்க வாய்ப்புள்ளது.

**எம்.ஜி.யு. (லோமனோசோவ் மாஸ்கோ ஸ்டேட் யுனிவர்சிற்றி)**

ரஷ்ய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்தப் பல்கலைக்கழகம் 1755 இல் மிகாயல் லோமனோசோவால் ஆரம்பிக்கப்பட்டது. ரஷ்யாவில் மிகப் பெரியதும் புகழ் பெற்றதுமாக விளங்குவது இப் பல்கலைக்கழகமே .19ஆம் நூற்றாண்டில் தொடங்கி இன்று வரை அறிவியல் ஆய்வுத்துறையில் பல்வேறு சாதனைகளை இப் பல்கலைக்கழகம் படைத்துள்ளது. இந்த பல்கலைக்கழகத்தில் 350 துறைகள் உள்ளன. இங்கு ஆய்வு நிலையங்களும் பரிசோதனைக் கூடங்களும் மியூசியங்களும் அதிக எண்ணிக்கையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தப் பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகம் ரஷ்யாவிலேயே மிகப் பெரியதாகக் கருதப் படுகிறது. தற்போது மாஸ்கோவை தலைமையகமாகக் கொண்டு இது செயல்படுகிறது.



இதில் படிக்கும் மாணவர்களுக்கென்றே கிட்டத்தட்ட 5ஆயிரம் அறைகள் உள்ளன. இந்தப் பல்கலைக்கழக வளாகம் கிட்டத்தட்ட 33 சதுர கி.மீ. பரப்பில் அமைந்திருப்பது மற்றொரு சிறப்பம்சமாகும். பல்கலைக் கழக வளாகத்தில் நீச்சல் குளம், காவல் நிலையம், தபால் அலுவலகம், சலவை நிலையங்கள், சலூன்கள், கன்டீன்கள், வங்கிக் கிளைகள், கோப்பிப்பகள் போன்றவை நிறைந்துள்ளன. சிறந்த கட்டடங்களும் வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த கோபுர வடிவிலான கட்டடங்களும் இங்கு சிறப்பம்சங்களாக திகழ்கின்றன. இந்தப் பல்கலைக்கழகத்தில் அடிப்படையில் 29 புலங்களும் 15 ஆய்வு மையங்களும் உள்ளன.

மெக்கானிக்கல் அண்ட் மதமடிக்ஸ், சைபர்னெடிக்ஸ், இயற்பியல், வேதியியல், உயிரியல், பயோ இன்ஜினியரிங், பயோ இன்பர்மேடிக்ஸ், மண் அறிவியல், மண்ணியல், புவியியல், மெட்டீ ரியல் சயின்ஸ், மருத்துவத் துறை, வரலாறு, தத்துவவியல், பொருளாதாரம், இதழியல், சமூக வியல், பொது நிர்வாகம், கலை, உலக அரசி யல், கல்வியியல், இராணுவப் பயிற்சி ஆகிய புலங்களில் இந்தப் பல்கலைக் கழகம் பல்வேறு படிப்புகளைத் தருகிறது.

இவை தவிர இந்த பல்கலைக்கழகம் பல்வேறு ஆய்வுப் படிப்புகளையும் உள்ளடக்கியுள்ளது. ஸ்கோ பெல்ட்சின் இன்ஸ்டிடியூட் ஆப் நியூக்ளியர் பிசிக்ஸ், இன்ஸ்டிடியூட் ஓப் மெக்கானிக்ஸ், ஸ்டன்பேர்க், அஸ்ட்ரானமிகல் இன்ஸ்டிடியூட், ஏ.என். பெலேசெர்ஸ்கி இன்ஸ்டிடியூட் ஓப் பிசியோகெமிக்கல் பயாலஜி, ஒயிட் சீ பயாலஜிக்கல் ஸ்டேசன் போன்ற ஆய்வு மையங்கள் இந்தப் பல்கலைக்கழகத்தின் சில ஆய்வுப் பிரிவுகளாகும்.

இதன் இணையத்தளமுகவரி **www.msu.ru/en**

இதன் சிறப்பம்சங்கள்:

✦ இங்கு 40 ஆயிரம் பேர் பட்டப்படிப்புகளையும் 7ஆயிரம் பேர் சட்ட மேற்படிப்புகளையும் படிக்கிறார்கள். இந்த பல்கலைக்கழகத்தில் 4ஆயிரம் விரிவுரையாளர்கள் பணிபுரிகிறார்கள். கிட்டத்தட்ட 5ஆயிரம் பேர் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

✦ ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 2ஆயிரம் வெளிநாட்டு மாணவர்கள் இங்கு கல்வி பயில வருகிறார்கள்.

✦ இந்த பல்கலைக்கழக வளாகத்தில் கிட்டத்தட்ட 600கட்டடங்கள் உள்ளன. மாஸ்கோவில் 205.7ஹெக்டேர் நிலப்பரப்பில் இந்த பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

**செயிண்ட் பீட்டர்ஸ் போர்க் ஸ்டேட் யுனிவர்சிற்றி (St.Petersberg State University)**

இந்த பல்கலைக்கழகமும் ரஷ்யாவின் பழமை வாய்ந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்று. இது 1724 இல் ஆரம்பிக்கப்பட்டது. ரஷ்யாவின் பீட்டர்ஸ் போர்க் நகரில் இது அமைந்துள்ளது. இந்த பல்கலைக்கழகத்தில் பயின்ற 7மாணவர்கள் நோபல் பரிசு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ரஷ்யாவின் கலாசாரத் தலைநகரில் அமைந்துள்ள இந்த பல்கலைக் கழகம்கலை இலக்கியம் படிக்க விரும்பும் மாணவருக்கு பொருத்தமான இலக்காகும்.

இங்கு Arts in Russia, Russian as a Second Language, International Business Semester, University Preparatory Courses, மொழிவழிப் பணி என பல்வேறு புலங்க்ளில் படிப்புகள் தரப்படுகின்றன.

இந்த பல்கலைக்கழகத்தின் இணையத் தள முகவரி: **www.spbu.ru.**

மாஸ்கோ இன்ஸ்டிடியூட் ஓப் பிசிக்ஸ் அண்ட் டெக்னோலஜி (Mascow Institute of Physics and Technology) மாஸ்கோவில் அமைந்துள்ள இந் நிறுவனம் 1951இல் ஆரம்பிக்கப் பட்டது. இந்த கல்வி நிறுவனத்தில் மனிதவியல், தொழில் நிர்வாகம், சமூக அறிவியல், பொறியியல், மொழியியல், கலாசாரப் படிப்புகள், அறிவியல் தொழில்நுட்பம் போன்ற பல பிரிவுகளிலும் படிப்புகள் தரப்படுகின்றன. இந்தப் பிரிவுகளில் சான்றிதழ்/டிப்ளோமா/அசோசியேட் படிப்புகளும், பட்டப்படிப்பு, பட்டமேற் படிப்பு மற்றும் ஆய்வுப் படிப்புகளும் தரப்படுகின்றன.

இங்கு கல்விக் கட்டணமாக பட்டப்படிப்புகளுக்கு ஆண்டுக்கு 3 இலட்சம் ரூபாய் முதல் 5இலட்சம் வரை ஆகிறது. இது தவிர, தங்குவதற்கு, உணவுக்கு, பிற செலவுகளுக்கும் ஆகும் செலவு தனி. நுழைவுத் தேர்வு மூலமாக இங்கு சேரலாம். நுழைவுத் தேர்வில் 50% மதிப்பெண் பெறுவது கட்டாயமாகும். இங்கு கிட்டத்தட்ட 5ஆயிரம் மாணவர்கள் கல்வி பயிலுகிறார்கள். தனியார் பொறுப்பில் நடத்தப்டும் இக் கல்வி நிறுவனத்தில் 1500ஆசிரியர்கள் பணியிலிருக்கிறார்கள். இதன் இணையத்தள முகவரி:**www.mipt.ru**.



R.U.பாலமுருகன்

# “விஷுவல் கொம்யூனிகேஷன்ஸ்”



விஷுவல் கொம்யூனிகேஷன்ஸ் ஏராளமான துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி தருகிறது. கடந்த சில ஆண்டுகளாக இந்த படிப்பை முடித்தவர்கள் நல்ல வேலை வாய்ப்புகளை பெற்றுள்ளனர். விஷுவல் கொம்யூனிகேஷன்ஸ் படிப்பதாகத் தான் நமது திரைப்பட ஹீரோக்கள் காட்டப்படுகிறார்கள்.

விஸ்காம் என்று பெருமையாக அழைக்கப்படும் படிப்பைப் படிப்பவர்களை கவனியுங்கள். அதிகப்படியான உற்சாகத்தையும் பொங்கும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துபவராக அவர்கள் இருப்பதைக் காணலாம். இத்துறையில் என்ன தான் இருக்கிறது?

சில ஆண்டுகளுக்கு முன்பு வானொலி , திரைப்படம், டி.வி பத்திரிகை என பல்வேறு வடிவங்களில் செயல்பட்டு வந்த பணிகளில் சிலவற்றை ஒன்றுசேர்த்து இன்று இத்துறைப் படிப்பானது உருவாக்கப்பட்டிருப்பதாகக் கூட கூறலாம். செயற்கைக் கோள், தகவல் தொழில் நுட்பம் வளர்ந்த பின்பு இன்று செயற்கைக் கோள் திரைப்பட ஒளிபரப்பு வரை பார்க்கிறோம். இது போல அசுர வேகத்தில் வளரும் இந்த ஊடகம் சிறப்புத்திறன் பெற்றவர்களை உருவாக்கவே இப் படிப்பு வடிவமைக்கப்பட்டது.

**பிரிவுகள்:** விஷுவல் கொம்யூனிகேஷன்ஸ் என்பது பன்முகத் தன்மை கொண்ட மீடியா படிப்பாகும். இது கிராபிக் டிசைன், இலஸ்டிரேசன், நுண் கலை, மல்டி மீடியா, போட்டோகிராபி ஆகியவற் றை உள்ளடக்கியதாக இருக்கிறது. தொழில் முறையில் இவற்றில் ஏற்படும் சவால்களை சந்திப்பதற்கும் சமாளிப்பதற்கும் இப் படிப்பு மிகவும் உதவியாக விளங்குமாறு உருவாக்கப்பட்டுள்ளது.

இன்று விஷுவல் கொம்யூனிகேஷன்ஸ் துறையின் பயன்பாடானது பல இடங்களில் உணரப்படுகிறது. உதாரணமாக விளம்பரம் என்பது முழுக்க முழுக்க இமேஜ்களையும் ஒரு சில வார்த்தைகளில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களையும் உள்ளடக்கியதாக இருப்பதை காண்கிறோம். இதுபோலவே உள்ளக வடிவமைப்பு, தொழிற்சாலை வடிவமைப்பு, வெளியீடுகளின் வடிவமைப்பு ஆகிய துறைகளும் காட்சி அடிப்படைகளை நம்பியிருக்கின்றன. இதுபோலவே புத்தகங்களுக்கான அல்லது பத்திரிகைகளுக்கான விஷுவல் கொம்யூனிகேஷன்ஸ் என்பது அதிகரிக்கும் முக்கியத்துவத்தைப் பெற்று வருவதைக் காண்கிறோம்.

**பயன்படுவது யாருக்கு?**

விளம்பர அதிகாரி, அனிமேட்டர் , ஆர்ட் டீலர், ஆர்டிஸ்ட், டிஜிட்டல் ஆர்டிஸ்ட், கிராபிக் டிசைனர், இன்டீரியர் டிசைனர், வெப்சைட் டிசை னர்ஆகியோர் தெரிந்தோ தெரியாமலோ விஷுவல் கொம்யூனிகேஷன்ஸ் அடிப்படை நுணுக்கங்களை நம்பியே இருக்கின்றனர்.

**பாடத் திட்டம்:** பொதுவாக இப் படிப்புக்கான பாடத்திட்டத்தில் பின்வரும் அம்சங்கள் இருக்கின்றன.

போட்டோகிராபிக்ஸ், பேசிக் டைப் போகிராபி, மல்டிமீடியா ஆதரிங், டெக்னிகல் டிரோயிங், அட்வர்டைசிங் டிசைன், டெஸ்க்டாப் பப்ளிசிங், கொம்யூனிகேஷன்ஸ் மற்றும் சோசியல் பிஹேவியர், இன்டஸ்ட்ரியல் டிசைன் டைப்போ கிராபி, கிராபிக்ஸ் சிஸ்டம் மனேஜ்மெண்ட், 3டி அனிமேசன், ஆடியோ மற்றும் வீடியோ எடிட்டிங் இந்த படிப்பை எங்கு படிக்கலாம் என்பது ஒரு கேள்வி. இன்று தமிழ் நாட்டில் சென்னை தவிர பிற நகரங்களிலும் இந்தப் படிப்பானது அறிமுகப்படுத்தப்படுகிறது. எனினும் சென்னை கல்லூரிகளே இதில் கோலோச்சுகின்றன. பிராக்டிக்கல் பயிற்சியை எந்தக் கல்லூரி தருகிறதோ அதுவே எதிர்கால வாய்ப்புகளை சிறப்பாக உருவாக்கித்தர முடியும்.

தமிழ் நாட்டு விஷுவல்கொம்யூனிகேஷன்ஸ் படிப்பில் அச்சு இதழியல், ஒலிபரப்பு தகவல் சாதனம், காட்சித் தகவல் சாதனம், இன்டர்நெட் இதழ்கள் ஆகிய பிரிவுகள் உள்ளன. இவற்றில் ஒன்றை சிறப்புப் படிப்பாகப் படித்து திறன் பெறுவது முக்கியம். பிற பிரிவுகளையும் அடிப்படையில் நன்றாக அறிந்துகொள்ளவேண்டும்.

கம்ப்யூட்டர் டிசைனிங் என்பது இன்று எந்தத் துறைக்குமான அடிப்படை என்பதால் போட்டோ ஷொப், இலஸ்டிரேட்டர், 3டி ஸ்டூடியோ, பிரீமியர், கேரக்டர் ஸ்டூடியோ, கோரல்டிரோ, மார்பிங், சவுண்ட் போர்ஜ், மேக்ரோமீடியா பிளாஸ், ரைடக்டர் ஆகிய சொப்ட்வேர்களை அறிந்து கொண்டு சிறப்புத்திறன் பெற வேண்டியதும் அவசியம். அடிப்படையில் கலை ஆர்வத்தையும் படைப்பாற்றலையும் பெற்றிருப்போருக்கு இத் துறை சிறப்பான படிப்பானதாக மாறி சிறந்த வேலை வாய்ப்புக்களையும் உருவாக்குவது உண்மை தான். எனினும் பொதுவாக இப்படிப்புக்கான கட்டணம் மிக அதிகமாக இருப்பதாகவே அறியப்படுகிறது. சுய நிதிப் படிப்பாகவே இது பொதுவாக தரப்படுகிறது. நுழைவுத் தேர்வும் நடத்தப்படுகிறது. வித்தியாசமாகவும் பயனுள்ளதாகவும் பலராலும் விரும்பப்படும் துறை இது என்பதில் சந்தேகமில்லை.

## சட்ட நடவடிக்கை எடுப்பதுபற்றி ஐ.தே.க.ஆராய்வு

சட்டவிரோதமான முறையில் இடம்பெற்று முடிவடைந்திருக்கும் தேர்தல் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தவிருப்பதுடன் தேர் தல் வன்முறைகளுக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுப்பது குறித்து ஆராயவிருப்ப தாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல கூறினார். கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர் பாக கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூடி ஆராய்ந்து, சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றித் தீர்மானம் எடுக்கப்படும். தேர்தல் வன்முறைகள் குறித்து எழுத்து மூலமான அறிக்கையொன்றை தேர்தல்கள் ஆணையாளர் தாயானந்த திஸ்ஸா நாயக்கவிடம் கைய ளிப்பதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். (அ-5)

## வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் தொகை 15.2 வீதமாக குறைவடைந்துள்ளது

### அம்பாந்தோட்டையில் மேம்பாடு,நுவரெலியாவில்33.8%

(கொழும்பு)

இலங்கையின் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் தொகை 15.2 சதவீதமாக குறைந்துள்ளதாக தொகை மதிப்பீடு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் புதிய வருமானம் மற்றும் செலவீனப் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டது.

2002 ஆம் ஆண்டு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் சதவீதம் 22.7 ஆக காணப்பட்டது.

அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோரின் வாழ்க்கை மட்டம் தற்போது குறிப்பிடத்தக்களவு மேம்பட்டுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் புள்ளி விபர மதிப்பீட்டிற்கமைய மாத்தளை, காலி, மாத்தறை, பதுளை, பொலனறுவை மற்றும் கேகாலை மாவட்டத்திலும் வறுமை நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் குறைந்தள வில் இருக்கின்றனர். இது 5.4 சதவீதமாகும். நுவரெலியா மாவட்டத்திலேயே வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் அதிகளவில் 33.8% உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## சபாநாயகரின் ஆலோசகராக பிரியாணி விஜேசேகர நியமனம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலாளரான திருமதி பிரியாணி விஜேசேகர நாடாளுமன்ற சபாநாயகரின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் செயல்படும் வகையில் இப்பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

சபாநாயகரின் ஆலோசகராக சர்வதேச பாராளுமன்ற சங்கத்தின் நடவடிக்கைகள், பொதுநலவாய நாடுகள் சபையின் பாராளுமன்ற சங்க நடவடிக்கைகள், சார்க் அமைப்பு தொடர்பான நடவடிக்கைகள் போன்ற பொறுப்புக்கள் இவரிடம் வழங்கப்பட்டுள்ளன. (அ-5)

## படையினருக்கான வீடமைப்புத் திட்டத்துக்கு ரூபா 200 மில்லியன் திரட்டப்பட்டுள்ளது

(கொழும்பு)

அனைவரும் ஒன்றாகுவோம் எனும் படையினருக்கான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு பொது மக்களிடமிருந்து முழுமையான ஆதரவு கிடத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சும் இலங்கை மத்திய வங்கியும் இணைந்து நடாத்திய 'அபி வெனுவன் அபி' நிதியத்திற்கு இதுவரை 200 மில்லியன் ரூபாய்கள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் இலங்கையரிடம் இருந்தே இந்த நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை பாதுகாப்புப் படையிருக்கு 50 ஆயிரம் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காகவே இந்த நிதி சேகரிக்கப் பட்டது.

இந்த நிதயைக் கொண்டு தற்போது 1, 500 வீடுகள் இபலோகம் நகரில் கட்டி முடிக் கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவை படையினரிடம் கையளிக்கப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## 28 இலங்கையர்கள் குவைத்தில் கைது

(கொழும்பு)

தொழில் வாய்ப்பின் நிமித்தம் சட்டவிரோதமாக ஈராக் செல்ல முற்றபட்ட 28 இலங்கையர்கள் குவைத்தில் கைது செய்யப் பட்டுள்ளனர். வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாத நிலையிலேயே இவர்கள் இவ்வாறு பயணம் செய்துள்ளதாக பணியகத்தின் தலைவர் தெரிவிக்கின்றார்.

சுற்றுலா விசாவில் இவர்கள் குவைத் உடாக ஈராக்கிற்குள் பிரவேசிக்க முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை மீள இலங்கைக்கு அழைத்து வர வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (அ-5)

## நெல்லுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அரசு தீர்மானம்

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நெல்லுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

அரிசி ஆலை உரிமையாளர்கள் கைவசம் உள்ள அரிசியை சந்தைப்படுத்தாமல் இருப்பார்களாயின், அரிசிக்கு மட்டுமல்ல நெல்லுக்கும் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுப்பதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிக்கின்றார்.

அரிசி விற்பனை நடவடிக்கைகளை தொடர்ந்தும் கண்காணித்து நெல்லுக்கான கட்டுப்பாட்டு விலை குறித்து முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார். அதன்படி ஒரு கிலோ நெல்லை விற்பனை செய்யக்கூடிய அதிகூடிய விலை நிர்ணயிக்கப்படும்.

நெல்லுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதன் மூலம் கூடிய விலைக்கு நெல் விற்பனை செய்வதையும் கூடுதல் விலைக்கு கொள்வனவு செய்வதையும் தடுக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம் விரைவில் நெல் கொள்வனவு குறித்து கொள்கை அடிப்படையிலான தீர்மானம் ஒன்றை எடுக்கும் என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை அரிசியின் விலை சந்தையில் 60ரூபாவுக்குக் குறையும் வரை அரிசிக்கு நியமிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை ஒரு போதும் நீக்கப்போவதில்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-5)

## வடபகுதியில் விரைவில் அபிவிருத்தி; மாகாண பதில் ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத் திப் பணிகள் இரண்டு வார காலப் பகுதியில் ஆரம்பிக்கப்படுமென கிழக்கு மாகாணத்தின் ஆளுநரும், வடக்கு மாகாணத்தின் பதில் ஆளுநருமான ரியர்அட்மிரல் மொஹான் விஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான அறிவுறுத்தல்கள் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான இடைக்கால ஆலோசனைக் குழு வழங்கியுள்ளது.

கிழக்கு மாகாண மக்கள் குறித்து ஜனாதிபதி அக்கறை செலுத்தியிருப்பதுடன் குறிப்பாக அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதி மக்களின் அடிப்படை வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கின்றனர்.

அண்மையில் விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் விரைவில் அபிவிருத்திப் பணிகளை நாங்கள் தொடங்கவுள்ளோம். மன்னார் பகுதியிலுள்ள முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்தி உட்கட்டுமானப் பணிகளை அபிவிருத்தி செய்வதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத் தரப்பினர் உரிய சமிக்ஞை வழங்கியதன் பின்னர் மடு பகுதியில் மீள்குடியேற்றங்கள் இடம்பெறும் என மொஹான் விஜயவிக்ரம கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டதன் பின்னர் வடக்கின் அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்த முடியும். வடமாகாணத்தில் அபிவிருத்திகள் மற்றும் மீள்குடியேற்றங்கள் முன்னெடுக்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரவித்துள்ளார். (அ-5)

## சர்வதேசத்தின் நிவாரண உதவிகளை ஏற்றுக்கொள்ள மியான்மர் சம்மதம்

(யங்கூன்)

சர்வதேச நாடுகளின் நிதியுதவி மற்றும் நிவாரணப் பொருட்களை ஏற்றுக்கொள்ள மியான்மர் முன்வந்துள்ளது.

மியான்மர் நாட்டை கடந்த வாரம் நர்கீஸ் புயல் தாக்கி வரலாறு காணாத சேதத்தை உண்டாக்கியது. இதில் 1 இலட்சம் பேருக்கு மேல் பலியானார்கள்.

இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகள் மியான்மருக்கு நிவாரண பொருட்களை அனுப்பி வைத்துள்ளது. எனினும் அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகளின் நிவாரண உதவியை மியான்மர் இராணுவ அரசு ஏற்க முன்வரவில்லை. மேலும் சர்வதேச நாடுகளின் நிவாரண ஊழியர்களையும் அனுமதிக்க மறுத்துவிட்டது. சர்வதேச நாடுகளின்நிதியுதவியை ஏற்க வேண்டும் என ஐ. நா. சபை மியான்மருக்கு வேண்டுகோள் விடுத்தது.

இது தொடர்பாக மியான்மர் அரசுடன் பேச்சு நடத்தி சம்மதிக்க வைக்க வேண்டும் என்று இந்தியாவிற்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்நிலையில வெளிநாடுகளின் நிதி மற்றும் நிவாரண உதவியை மியான்மர் ஏற்றுக் கொள்ள முன்வந்திருப்பதாக அறிவித்துள்ளது.

மியான்மருக்கான ஐ.நா. தூதர் இதனை அறிவித்துள்ளார். எனினும் நிவாரணப் பணியில் ஈடுபட காத்திருக்கும் தொண்டர்களை அனுமதிக்க மியான்மர் தொடர்ந்து மறுக்கிறது. தற்போது இந்த தொண்டர்கள் தாய்லாந்தில் காத்திருக்கின்றனர். (அ-5)

## தைவானில் கடும் பூகம்பம்

(தைபி)

தைவானில் நேற்று அதிகாலை கடும் பூகம்பம் தாக்கியது. எனினும் இந்த பூகம்பம் காரணமாக உயிரிழப்போ பொருட்சேதமோ ஏற்பட்டதாக உடனடித் தகவல்கள் வெளியாகவில்லை.

தைவானில் உள்ள சுவோ என்ற இடத்தில் மையம் கொண்ட இந்த பூகம்பம் ரிக்டர் அளவுகோளில் 5.3 என்ற அளவில் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி அதிகாலை 3.41லிருந்து (இலங்கை நேரம் நள்ளிரவு 1.11 மணிக்கு) ஏற்பட்ட இந்த பூகம்பம் காரணமாக மக்கள் அலறியடித்துக் கொண்டு தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தைவானில் அடிக்கடி பூகம்பங்கள் தாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## இறந்து போன பெண்ணுக்கு 'கர்த்தர்' உயிர் தருவார் தாயாரின் பிணத்துடன் மகள் 2 மாதம் ஜெபம்

(மேடிசன்)

அமெரிக்காவில் உள்ள வாஸ்கான்சின் மாநிலம் மிடில்ஸ் வொர்த் என்ற இடத்தை சேர்ந்த மக்தலீன் ஆல்வீனா (வயது 90) நோய் வாய்ப்பட்டிருந்த வேளை கடந்த 2 மாதத்திற்கு முன்னர் இறந்து போனார்.

தாய்மீது மிகுந்த பாசம் வைத்திருந்த மகள் லீவிஸ் (35) மற்றும் 2 பேத்திகள் உடனடியாக அங்குள்ள தேவலாயத்துக்கு சென்று பாதிரியார் புசே என்பவரிடம் முறையிட்டனர்.

அவர்களிடம் எல்லாம் வல்ல இயேசு கிறிஸ்துவை மனம் உருக பிரார்த்தனை செய்யுங்கள். அவர் மக்தலீன் இறந்து போன உடலுக்குள் உயிரை ரட்சித்து தருவார் என்று ஆறுதல் கூறி அனுப்பினார்.

இதனையடுத்து மக்தலீன் உடலை வீட்டின் கடைசி அறையில் வைத்து நறுமணம் கமழும் பத்தி வகைகளை பொருத்தி வைத்து ஜெபம் செய்ய ஆரம்பித்தனர்.

இப்படியாக கடந்த 2மாதங்கள் தனது தாயாரின் பிணத்துடன் லீவிஸ் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்த நிலையில் மிடில்ஸ் வொர்த் நகரில் இருந்து 120 கி.மீ. தொலைவில் வாழந்த மக்தலீன் உறவினர் ஒருவர் பொலிசுக்கு ஒரு தகவல் கொடுத்தார். என் உறவினர் மக்தலீனைப் பற்றி கடந்த 2 மாதமாக தகவல் எதுவும் இல்லை அவர் என்ன ஆனார் என்பது பற்றி விசாரணை நடத்துங்கள் என்று அவர் கூறினார். இதனையடுத்து அதிகாரிகள் அங்கு சென்று விசாரணை நடத்தியபோது மக்தலீன் விடுமுறையில் வெளியூர் போயிருப்பதாக லீவிஸ் கூறினார்.

இருந்தபோதிலும் பொலிஸாரின் சந்தேகக் கண்கள் விடுவதாக இல்லை. வீடு முழுவதும் அதிரடி சோதனையிட்ட போது மக்தலீன் பிணத்தை கண்டு பிடித்தனர்.

முழுக்க முழுக்க சிதைந்துபோன அந்தப் பிணத்தை மீட்டு புதைத்தனர். பாதிரியார் புசேவையும் லீவிசையும் அவர்கள் கைது செய்து விசாரணை நடத்திவருகின்றனர். (அ-5)

## உலக தரிசனம்

## துருக்கி விமானக் குண்டுவீச்சில் 20 குர்தீஷ் தீவிரவாதிகள் சாவு

(அங்காரா)

துருக்கியின் தென்கிழக்கில் குர்தீஷ் மக்கள் அதிகளவில் வசிக்கும் பகுதிக்கு சுதந்திரம் கோரி குர்தீஷ் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த தீவிரவாதிகள் போராடி வருகின்றனர்.

இவர்கள் ஈராக் எல்லையில் மறைந்து இருந்தபடி அவ்வப்போது தாக்குதல் நடத்துகின்றார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை ஈராக் -துருக்கி எல்லையில் உள்ள ஒரு துருக்கி இராணுவ தளம் மீது 50க்கும் மேற்பட்ட குர்தீஷ் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதைத்தொடர்ந்து ஈராக் எல்லையில் உள்ள குர்தீஷ் தீவிரவாதிகள் முகாம் மீது துருக்கி இராணுவ விமானங்கள் சரமாரியாக குண்டு வீசின. இந்த குண்டுவீச்சில் 20 குர்தீஷ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக துருக்கி இராணுவம் தெரிவித்துள்ளது.

(அ-5)

> ஒரு துருப்பிடித்த ஆணியை வெளியில் எடுப்பதற்கு சுவரைக் கொஞ்சம் உடைத்தெடுக்க வேண்டும்.
>
> – இத்தாலி

வலம்புரி

## பெண் பிள்ளைகளின் மீது இளைஞர்களின் சேட்டை

யாழ்ப்பாணத்தில் இடையிடையே தலை தூக்கும் கலாசார பிறழ்வுகளும், இளைஞர்களின் நெறிப் பிறழ்வுகளும் வேதனை தருவனவாக உள்ளன.

அதிலும் இளம் பெண் பிள்ளைகள் வீதியால் செல்லும்போது இளைஞர்கள் விடும் சேட்டை எல்லை மீறியதாகக் காணப்படுகின்றது.

நேற்று முன்தினம் கந்தர்மடம் புகையிரத கடவையை அண்மித்த அரசடி வீதியால் சென்ற இளம் பெண்களை சில இளைஞர்கள் துரத்திச் சென்று அவர்களுக்கு ஊறு விளைவித்தனர்.

அந்த இளைஞர்களில் வயதில் குறைந்த சிலரும் இருந்ததைக் காணமுடிகின்றது.

மேசன் தொழில் அல்லது அதனுடன் சார்ந்த தொழில் புரியும் இளைஞர்களாகக் காட்சி அளித்தவர்களே இவ்விதம் வீதியால் சென்ற பெண் பிள்ளைகளுடன் சேட்டை செய்தனர்.

இதில் வேதனைக்குரிய விடயம் என்னவெனில், அந்த இளைஞர்கள் சேட்டை செய்த போதிலும் வீதியால் சென்றவர்கள் எதுவுமே பேசாமல் ஒதுங்கிக் கொண்டனர்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெண் பிள்ளைகளிடம் சேட்டை செய்தால் அவர்களுக்குக் கிடைக்கும் பாடம் எத்தகையதென்பதையும், இப்போது அதனை வேடிக்கையாக அல்லது தேவையற்ற சிக்கல் நமக்கேன் என ஒதுங்கிச் செல்லும் நிலையையும் பார்க்கும்போது சமூகத்தின் பெறுமானம் எந்தளவு தூரம் கீழ் இறங்கி உள்ளதென்பதை உணர முடிகிறது.

இவ்விதம் சமூக கண்காணிப்பும், சமூகப் பாதுகாப்பும் விடுபடும்போது கலாசார சீரழிவுகளும் நெறிப் பிறழ்வுகளும் சர்வ சாதாரணமாக இடம் பெற வாய்ப்புண்டு.

எனவே வீதியால் செல்லும் பெண் பிள்ளைகளுக்கான பாதுகாப்பை சமகால சூழ்நிலையில் நீதி, நிர்வாகம் எந்தளவு தூரம் உறுதி செய்யும் என்பது கேள்விக்குரியதாக இருப்பதால், மக்கள் சமூகம் விழித்துக் கொள்வது அவசியமாகும்.

பெண் பிள்ளைகளிடம் சேட்டை விடுவதில் பாடசாலை இடைவிலகிய – தொழிலாளர் தரத்திலான– சமூக கலாசார பின்னடைவுடையவர்களே அதிகூடிய பங்கை வகிக்கின்றனர். எப்படியும் வாழலாம் என்ற இந்த வர்க்கத்துடன் அன்பாகக் கதைக்க முற்படுவதுகூட முட்டி மோதும் செயலாகவே அமையும்.

கதைத்தால் கத்தி, வாள் என்ற கலாசாரத்திற்குப் பழக்கப்பட்ட இவர்கள்மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை வித்தியாசமானதாகவே இருக்க வேண்டும்.

எனவே இது விடயத்தில் பெற்றோர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வது முதற் பணியாகும்.

அடுத்து பொதுமக்கள் விழிப்பாகவும் துணிவாகவும் ஒற்றுமையாகவும் இருந்து சமூகத்தின் பாதுகாப்பை உறுதி செய்வது பொதுமக்கள் தரப்பிலான பிரதான பணியாகும்.

# 5500 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

## பிரதி கல்வி அமைச்சர் சச்சிதானந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளுக்கு 1500 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் மாகாண சபைகளின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கு 4ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந் நியமனங்களை இரண்டு மாதங்களில் நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதிக் கல்வி அமைச்சர் சச்சிதானந்தன் தெரிவித்தார்.

இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் அமைக்கப்படவுள்ள புதிய கட்டிடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கடந்த வெள்ளியன்று உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் ந.மன்மதராஜன் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் பிரதி அமைச்சர் மேலும் கூறியதாவது,

தமிழ்மொழி பாடசாலை மூலமாக தரமான கல்விக்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். இந்த தரமான கல்விக்கு இருக்கும் சவால்களுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டும். அந்த ரீதியில் ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு தரமான ஆசிரியர்களாக மாற்றி அமைப்பதற்கு கல்வி அமைச்சு கொள்கை ரீதியாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

அடுத்தது திறந்த பொருளா தார கொள்கை, உலகமயமாக்கல் இவற்றிற்கு ஏற்ற கல்வி இந்த நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் அவசியம். ஆகவே இணையத்தளம் மூலமாக கல்வியை கற்றுக்கொள்ளும் அள விற்கு கணனி யுகத்தை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சின் கொள்கையிலே உள்ளடக்கப்பட்டுள்ளது என்றார். (அ–5)

## நவீன தேசிய அடையாள அட்டைகள்; அடுத்த ஆண்டு வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

அதிநவீன தொழில்நுட்ப முறைகளை பயன் படுத்தி எந்த வகையிலும் மாற்றியமைக்க முடியாத வகையில் தேசிய அடையாள அட்டைகளை தயாரித்து வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இப்புதிய தேசிய அடையாள அட்டை எதிர்வரும் 2009 ஆம் ஆண்டு விநியோகிக்கப்படவுள்ளது.

இப்புதிய தேசிய அடையாள அட்டைகளை அனைத்து இலங்கைப் பிரஜைகளும் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் பழைய தேசிய அடையாள அட்டைகள் செல்லுபடியற்றதாகி விடும் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஏ.பி. தர்மதாஸ தெரிவித்துள்ளார்.

புதிய நவீன முறையிலான தேசிய அடையாள அட்டைகள் விநியோகித்த பின்னர் போலி அடையாள அட்டைகளை பயன்படுத்தி பயங்கரவாத செயல்பாடுகள் மற்றும் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்பிருக்காது.

அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு மற்றும் தற்கொலைக் குண்டு சம்பவங்களில் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்ட போது அவை போலியான அடையாள அட்டைகள் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் புதிதாக தயாரிக்கப்படும் தேசிய அடையாள அட்டை விபரங்கள் அனைத்தும்கணனியில் பதிவு செய்யப்படும் என்றும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ–5)

## கருணா விடயத்தில் பிரித்தானியா நீதியை நிலைநாட்டத் தவறிவிட்டது மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாரதூரமான போர்க்குற்றங்களில் ஈடுபட்ட ஒரு குற்றவாளிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காது பிரித்தானிய அரசாங்கம் நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தில் எந்தக் குற்றச் செயல்களை இலங்கை இராணுவத்தின் துணை இராணுவக் குழுவை சேர்ந்த கருணா மேற்கொண்டார் என்பதனை நிரூபிப்பதற்கு போதியளவு சாட்சியங்கள் முன்வைக்கப்படாத காரணத்தினால் வழக்கு தொடர முடியாது என்று கடந்த வெள்ளிக்கிழமை பிரித்தானிய அரசாங்கம் அறிவித்தது.

இது தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தில் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

கருணா போன்ற மிகத் தீவிரமான மனித உரிமை மற்றும் போர் குற்றவாளி ஒருவரை தண்டிப்பதற்கான அரியசந்தர்ப்பம் ஒன்றை பிரித்தானிய அரசாங்கம் கை நழுவ விட்டுள்ளது.

உலகின் எந்தப் பகுதியில் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் தண்டனை வழங்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

கருணா தண்டனைகளிலிருந்து தப்பித்தால் அது கருணாவினால் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகப்பட்டோருக்கும், சர்வதேச சட்டங்களுக்கும் இழைக்கப்படும் மாபெரும் தீங்காகவே நோக்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த தளபதியாக கருணா கடமையாற்றியுள்ளார். 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து செயற்படும் காலம் வரையில் இயக்கத்தின் இரண்டாம் நிலை தலைவராகவே கருணா கருதப்பட்டார். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு எதிராக கருணா குழுவினர் போராட்டங்களை முன்னெடுத்தமையின் காரணமாக அரசாங்கம் அவருக்கு எதிராக எந்த வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக அவருக்கு ஆதரவு வழங்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி கருணாவை ஐக்கிய இராச்சிய குடிவரவு திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர்.போலிக் கடவுச் சீட்டை பயன்படுத்தி பிரித்தானியாவுக்குள் பிரவேசிக்க முற்பட்ட குற்றச்சாட்டிற்காக கருணாவுக்கு 9 மாத சிறைத்தண்டனை வழங்கப் பட்டது.

எனினும் இந்தத் தண்டனைக் காலப் பகுதியில் அரைவாசிக் காலத்திலேயே கருணா விடுதலை செய்யப்பட்டார். கடந்த 9 ஆம் திகதி கருணா பிரித்தானிய குடிவரவு குடியகல்வு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இலங்கையில் பாரிய அளவிலான மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெற்று வருவதாக அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகள் அமைப்பையும் பிரித்தானிய அரசாங்கம் குற்றஞ்சாட்டி வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறிய பின்னர் அரச படையினரின் ஒத்துழைப்புடன் தமது இராணுவ நடவடிக்கைகளை கருணா முன்னெடுத்தார்.

வீடுகள், கோவில்கள், மைதானங்கள்,வீதிகள்,இடைத்தங் கல் முகாம்கள் மற்றும் திருமண வீடுகளில் இருந்து சிறுவர்களை கடத்திச்சென்று தமது படையில் கருணா இணைத்துக் கொண்டார்.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மனித உரிமைகள் கண் காணிப்பகம் வெளியிட்ட அறிக்கைகளில் இந்தக் கடத்தல்கள் தொடர்பான தகவல்கள் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோர் அதாவது சர்வதேச சட்டங்களுக்கு புறம்பான வகையில் செயற்பட்டோருக்கு பிரித்தானிய அரசாங்கம் தண்டணை வழங்கியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் மிகமோசமான போர் குற்றவாளி பாயாடி சர்வா சார்தாருக்கு ஐக்கிய இராச்சிய நீதிமன்றம் தண்டணை வழங்கியிருந்தமையை இதற்கு மேற்கோளாக காட்டலாம்.

கருணாவைபிரித்தானியாவில் இருந்து வெளியேற்றுவதற்கு முன்னர் காவல் துறையினரால் முன்வைக்கப் பட்டுள்ள சாட்சியங்கள் குறித்து மிக உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டும் .

பிரித்தானியாவிலிருந்து கருணா வெளியேற்றப்பட்டார். இலங்கை அரசாங்கம் கருணாவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.அவ்வாறு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படா விட்டால் மனித உரிமை விவகாரங்கள் குறித்து இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் மேலும் வலுப்பெறக் கூடிய சாத்தியங்கள் உருவாவதை தவிர்க்க முடியாது என்றார் அவர். (ந–5)

ஓலைச் சுவடிகள் 27

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### தெற்குத் திசையில் உள்ள தீபத்தை ஏன் தரிசிக்க வேண்டும்?

தீபத்திற்கும் அதன் சுடர்களுக்கும் சாஸ்திரப்படி நற்குணங்கள் உள்ள போதிலும் தெற்கு திசையிலிருந்து வரும் தீபத்தை தரிசிக்க வேண்டும் என்று ஆசாரியர் கற்பித்துள்ளனர்.

ஆனால் குத்து விளக்கிற்கு திரிவைக்கும் போது தெற்கு நோக்கி வைத்து பற்றவைக்க வேண்டும். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஒரு காந்த சக்தி செய்யப்படுகின்றது. இந்த காந்த சக்தியின் ஆரம்ப இடமான தெற்குப் பக்கதிலிருந்து வரும் தீபச்சுடர் அந்த காந்த சக்தியின் வழியாகக் கடந்து வருகின்றது. இதனால் தெற்கு திசையிலுள்ள தீபத்தைத் தரிசிக்க வேண்டும் என்று ஆசாரியர்கள் விதித்தனர். இவ்வாறு கடந்து செல்வதற்காகவே பழைய சுவர்களில் தெற்கேயும் வடக்கேயும் துவாரங்கள் அமைத்திருந்தனர்.

தெற்கு நோக்கியுள்ள அதாவது காந்த சக்திக்கு எதிராக உள்ள பலதுக்கும் பழைய மக்கள் விலக்கு விதித்திருந்தனர். வீடுகட்டும் போது பொதுவாக தெற்கு நோக்கி படி கட்டுவதில்லை. குளிக்கும் போது தெற்கு நோக்கி நின்று முங்கக் கூடாதென்று விதித்தனர். கோடாலி முதலிய கருவிகளை தெற்கு பாகத்தில் வைக்கலாகாது. இப்படி தெற்கு திசையைப் பற்றி பல விஷயங்கள் கண்டறிந்துள்ளனர்.

# சமாதானம் எறிகணையால் மணிக்கு 40 படையினர் பலி

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற முகமாலைச் சமரில் தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானம் எனப்படும் தமது தயாரிப்பு எறிகணைகளை ஏவியிருந்தனர். இதனால் மணிக்கு 30-40 பேரை இராணுவம் இழந்திருந்தது என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான சண்டே லீடர் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. சமாதானம் எனும் சொல்லை மிகவும் நகைச்சுவையாக களத்தில் வீழ்ந்து வெடிக்கும் எறிகணைகளுக்கு விடுதலைப்புலிகள் சூட்டியுள்ளனர்.

மோட்டார் எறிகணைகள் மற்றும் வான் குண்டுகளுக்கு எல்லாம் புதிய பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த எறிகணைகள் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற முகமாலைச் சமரிலும் அரசிற்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தியிருந்தது.

53 மற்றும் 55 ஆவது படையணிகள் விடுதலைப் புலிகளின் முன்னணி அரணை அடைந்தபோது விடுதலைப்புலிகள் தாக்குதலை ஆரம்பித்ததுடன் 82 மி.மீ., 152 மி.மீ., 130 மி.மீ. எறிகணைகளும் சரமாரியாக ஏவப்பட்டன.

இந்தச் சமரில் விடுதலைப்புலிகள் ஆயிரத்திற்கும் அதிகமான எறிகணைகளை ஏவியிருந்தனர். இதனால் மணிக்கு 30-40 பேரை இராணுவம் இழந்திருந்தது. 53 ஆவது படையணியே 80 வீதமான இழப்பைச் சந்தித்திருந்தது.

விடுதலைப்புலிகள் தமது பீரங்கிகளில் சிலவற்றை சேரன்பற்று பகுதியில் வைத்து இயக்கியிருந்தனர். இந்தச் சமரில் பயன்படுத்திய தமது சொந்தத் தயாரிப்பு மோட்டார் எறிகணைகளை விடுதலைப்புலிகள் படையினருக்கு அருகில் வைத்தே பயன்படுத்தியிருந்தனர்.

சமாதானம் எறிகணைகள் 2 கி.மீ.தூர வீச்சுக் கொண்டவை. சிலர் அதன் தூரம் மிகவும் அதிகம் என தெரிவித்துள்ளனர். எனினும் விடுதலைப்புலிகள் மிக அதிகளவில் எறிகணைகளைப் பயன்படுத்தியது அவர்கள் புதிய எறிகணைகளை தருவித்துள்ளதாக சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமாதானம் எறிகணைகள் விடுதலைப்புலிகளின் 3 ஆம் தலைமுறை எறிகணைகளாகும். விடுதலைப் புலிகள் எறிகணைகளை உருவாக்கும் தமது முயற்சியை 1980 களில் ஆரம்பித்திருந்ததாக தெரிவிக்கப் பட்டது. இந்த எறிகணைகளின் பெயர் பாபா,

1990 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பசீலன் - 2000 எறிகணைகளை விடுதலைப்புலிகள் பயன்படுத்தியிருந்தனர். விடு தலைப்புலிகளின் ஆயுத ஆய்வு மையத்தினால் வடிவமைக்கப்பட்ட பசீலன் - 2000 மோட்டார் 25 கி.கி. நிறையுடைய எறிகணையை ஒரு கி.மீ. தூரத்திற்கு வீசத்தக்கது.

பசீலன் - 2000 எறிகணை செலுத்திகளை விடுதலைப்புலிகள் உழவு இயந்திரத்தில் பொருத்தி பயன்படுத்தியிருந்தனர். படையினர் தமது எறிகணைச் செலுத்திகளை கண்டறிவதைத் தவிர்க்கும் முகமாக விடுதலைப்புலிகள் ஆட்லறிப் பீரங்கிகளைக் கூட வாகனங்களில் பொருத்தியே பயன்படுத்தியிருந்தனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

## விடுதலைப்புலி...

பாதைகள் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே முல்லைத்தீவிலுள்ள ஓடு பாதையை அவர்கள் புனரமைத்து வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். எனவே விடுதலைப்புலிகள் ஒன்றுக்கும் அதிகமான ஓடு பாதைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த காலத்தில் நடத்தப்பட்ட ஐந்து வான் தாக்குதல்களுக்கும் விடுதலைப்புலிகள் இரணைமடு ஓடு பாதையையே பயன்படுத்தியிருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன.

முல்லைத்தீவிலுள்ள ஓடுபாதை மணலாற்றுக்கு அண்மையிலுள்ளது குறிப்பிடத்தக்கது. விடுதலைப்புலிகளிடம் ஐந்துக்கும்அதிகமான சிலின்-143 இலகு ரக விமானங்கள் உள்ளன எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பேரிடியாக...

கொடுங்கோன்மை அரசை எதிர்த்து நிற்பதற்கான வலிமையான மனங்களைக் கொண்டவர்களாக துன்பத்தின் பிடியில் இருக்கின்றபோதும் விடுதலைக்கு உரிய பங்களிப்பைச் செய்யும் மக்களாக நீங்கள் காணப்படுகின்றீர்கள்.

தமிழன் தன் தலையை நிமிர்த்துகின்ற இன்னுமொரு வரலாற்று நாளாக இன்றைய நாளில் நாம் கூடி நிற்கின்றோம் என்றார். அக்கராயன் கோட்ட வீரமுரசு நிகழ்வு நேற்று முன்தினம் இரவு வன்னேரிக்குளம் சிறப்பு வேலைத்திட்டப் பொறுப்பாளர் சு.ஜெகன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கத்தில் பொதுச் சுடரினை இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் ஏற்றினார். (ச-5)

## பொருளியல் ...

வரதராஜனின் மனைவி வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்திலிருந்து வந்ததாகத் தெரிவித்தே தமது வீட்டுக்கு வந்தவர்கள் ஸ்ரீதரனை அழைத்துச் சென்றதாக வரதராஜனின் மனைவி தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் மனைவி முறையிட்டபோது தமது நிலையத்திலிருந்து எவரும் இப்படி அவர்களின் வீட்டுக்கு வரவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-5)

## பிள்ளையானுக்கு...

ஆயிரத்து 419 வாக்குகளைப் பெற்றிருக்கின்றார். எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா 35 ஆயிரத்து 949 வாக்குகளைப் பெற்று 3 ஆம் இடத்தை வகிக்கின்றார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட முதன்மை வேட்பாளரும் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளருமான பசீர் சேவுதாவூத் 23 ஆயிரத்து 342 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இப் பட்டியலில் போட்டியிட்ட வெள்ளைத் தம்பி அமீர்டீன் 12 ஆயிரத்து 157 வாக்கு களையும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களான அரசரத்தினம் சசிதரன் 11 ஆயிரத்து 21 வாக்குகளையும் ரி.ஏ.மாசிலாமணி 8 ஆயிரத்து 42 வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர். (ச-5)

## இந்தியாவின் ...

லீடருக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்நேர்காணலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் மேலும் கூறியுள்ளதாவது,

நோர்வே அனுசரணையாளர்கள் தமது அரசியல் துறை உயர் மட்டத்தினருடன் பலமுறை சந்தித்துக் கலந்துரையாடுவதற்காக கிளிநொச்சி வருவதற்கு அரசாங்கத்திடம் பலமுறை அனுமதி கேட்டும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

எனினும் நாம் நோர்வே அரசுடன் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணி வருகின்றோம் என்றார். இதேவேளை விடுதலைப்புலிகள் கேட்டுக் கொண்டால் இலங் கை இனப்பிரச் சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா தலையிடும் என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் இந்தியாவின் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி பி.என்.பகவதி கூறியிருந்தார்.

இது குறித்து விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டைக் கேட்டபோதே தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் மௌனம் சாதித்து விட்டார் எனவும் சண்டே லீடர் தெரிவித்துள்ளது. (ச-5)

## புதிய பயங்கரவாதத்திற்கு...

இவ்வாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

இனவாதம், அரசாங்கத்தின் அடாவடித் தனங்கள், ஊடகங்களின் அரசு சார்புத் தன்மை , நிதி போன்ற அதிகாரங்களைப் பயன்படுத்தியே கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தேறியுள்ளது.

இத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நாள் தொடக்கம் தேர்தல் இடம் பெற்ற தினத்தன்று வரை நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான சூழ்நிலை காணப்படவில்லை.

தேர்தல் அன்று மக்களை வாக்களிக்க விடாது தடுத்து நிறுத்தி போலியான அடையாள அட்டைகளைத் தயாரித்து கள்ள வாக்குகள் போடப்பட்டன. அமைச்சர்கள், அரசாங்க முக்கியஸ்தர்கள்; குண்டர்களைப் பயன்படுத்தி மோசமான வாக்குக் கொள்ளையில் ஈடுபட்டனர்.

அரசாங்கம், தமிழ் இனவாதத்தை முன்னெடுத்தது. ஹக்கீம் முஸ்லிம் இனவாதத்தை முன்னெடுத்தார். அத்தோடு அரசு தனது முதலமைச்சர் வேட்பாளர் யாரென அறிவிக்காது குழப்பகரமான நிலையில் தேர்தலை நடத்தி முடித்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் ஜே.வி.பி. இனவாதத்திற்கும் பிரிவினைவாதத்திற்கும் எதிராகத் தனித்துப் போட்டியிட்டு ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டமை பெருமைக்குரியதாகும். எமக்கு வாக்களித்த மக்களுக்கு இத்தருணத்தில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார். (ச-5)






அன்புளநீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க அறமெழுந்து பெருஞ் சேவை ஆற்ற ஆற்றத்
தொண்டு செயப் பல அன்பர் தோன்றத் தோன்ற தோற்றுசுவைச் சோறாக உண்ண உண்ணக்
கண்டுவரும் அடியவர்கள் ஆர்ப்ப ஆர்ப்ப கடி அமுதசுரபியினாள் ஊட்ட ஊட்டக்
கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி கோடானு காலமெல்லாம் வாழிவாழி

## நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

Reg. No.S.236

ஆரம்பம் : 1960 (வரைவுள்ளது) 2008

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை அமுதசுரபி என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின்கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 48-வது ஆண்டில் பிரவேசிப்பதில் மனமகிழ்வெய்துகின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத் தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள் உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச் சேவையை சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் நற்சேவைத் தொண்டர்களுக்கும் அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும் தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும் கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்து பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாண்டு வைகாசி மாதம் 22 ஆம் நாள் (04.06.2008) புதன்கிழமை அம்பிகையின் உயர் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வைகாசி மாதம் 31 ஆம் நாள் (13.06.2008) வெள்ளிக்கிழமை திருமஞ்சத் திருவிழாவும் மறுநாள் (14.06.2008) பூந்தண்டிகைத் திருவிழாவும் ஆனி மாதம் 2 ஆம் நாள் (16.06.2008) சப்பறத் திருவிழாவும் ஆனி மாதம் 3 ஆம் நாள் (17.06.2008) செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆனி 4 ஆம் நாள் (18.06.2008) புதன்கிழமை பூரணத் தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று ஆனி மாதம் 5 ஆம் நாள் (19.06.2008) வியாழக்கிழமை தெப்பத் திருவிழாவுடன் நிறைவுறத் திருவருள் பாலித்துள்ளது.

அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் 16 நாள்களும் இரவு, பகல் அன்னதானம் வழங்க சபை தீர்மானம் செய்துள்ளது. எனவே தரும கொடை வள்ளல்களான, உங்களிடம் எமது சபையால் நியமிக்கப் பெற்ற உத்தமத் தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் நீங்கள் வழங்கும் பணம், பொருள் முதலியவற்றைக் கையளித்துச் சபையின் பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நேரடியாகப் பணம் கொடுக்க விரும்வோர் **Amuthasurabhi Commercial Bank கண.இல.1247985001, Peoples Park கட்டடம் pettah B.O.C. க/கு இல.7687836 ஊர்காவற்றுறை கிளை வேலணை** என்னும் விலாசத்திற்கு அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் தங்கி நின்று தரிசிப்பதற்காக நவீன வசதிகளுடன் கூடிய அமுதசுரபி அன்னபூரணி இறைபயணிகள் இல்லமும் திறந்து வைக்கப்பட்டுள்ளதென்பதை மனமகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

## குடாநாட்டில் பணம், பொருள் சேகரிப்போர்

| | |
|---|---|
| திரு.அ.சண்முகநாதன் J.P. | சபை உறுப்பினர் |
| திரு.கு.சாந்தலிங்கம் | கௌரவ செயலாளர் |
| திரு.கோ.வாமதாசன் | சபை உறுப்பினர் |
| திரு.வே.மு.சண்முகராசா | ஆரம்ப கால உறுப்பினர் |
| திரு.தி.பத்மநாதன் | நற்சேவைத் தொண்டர் |
| திரு.சி.பொ.இராசரத்தினம் | சபை உறுப்பினர் |
| திரு.க.உருத்திரகுமாரன் J.P. | சபை உறுப்பினர் |
| திரு.கோ.சிவகடாட்சம் | சபை உறுப்பினர் |
| திரு.பூ.சந்திரகுமார் | சபை உறுப்பினர் |
| திரு.மு.பகீரதன் | நற்சேவைத் தொண்டர் |
| திரு.வீ.கனகரெத்தினம் | நற்சேவைத் தொண்டர் |
| திரு.ச.சுரேஷ்கரன் | நற்சேவைத் தொண்டர் |
| திரு.தம்பிராசா முகுந்தராசா | நற்சேவைத் தொண்டர் |
| திரு.எஸ்.என்.கதிர்வேல் J.P. | நற்சேவைத் தொண்டர் |
| திரு.ந.திருச்செல்வம் | நற்சேவைத் தொண்டர் |
| திரு.பூ.யோகரத்தினம் | நற்சேவைத் தொண்டர் |
| திரு.சி.சிவகுமார் | நற்சேவைத் தொண்டர் |

கு.சாந்தலிங்கம் - செயலாளர்

அமுதசுரபி மண்டபம், நயினாதீவு -02.

தொலைபேசி இல. 060 221 3575

(C-1104)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1, இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.